விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## சங்குநாதம்




சங்கு 26
ஒலி 178 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 01 ஞாயிற்றுக்கிழமை (15.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கே.கே.எஸ் பகுதியில்

## 10 பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும்

### மிரட்டல் அழைப்புத் தொடர்பில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பகுதியில் உள்ள பத்து பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்று காங்கேசன்துறை பொலிஸூக்கு வந்த மிரட்டல் அழைப்பு குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி மதியம் 1.15 மணி முதல் 1.20 மணி வரை 23ஆம் பக்கம் பார்க்க

## ஈரான் தலைநகர் பற்றி எரியும்

### இஸ்ரேல் பகிரங்க எச்சரிக்கை

### தொடரும் போர்ப் பதற்றம்



(ஜெருசலேம்)

இஸ்ரேல் மீது மேலும் ஏவுகணைகளை வீசினால் ஈரான் தலைநகர் தெஹ்ரான் பற்றி எரியும் என ஈரானுக்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் கடும் எச்சரிக்கை விடுத் 23ஆம் பக்கம் பார்க்க

அத்தியாவசிய மருந்துக்குத் தட்டுப்பாடு

# அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

நாட்டில் 180க்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் அநுர அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். *(23ஆம் பக்கம் பார்க்க)*

## 240 கிலோ கஞ்சா பொன்னாலையில் மீட்பு

### சந்தேகநபர் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை காட்டுப் பகுதிக்குள் 240 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை மதியம் இச்சம்பவம் இடம்பெற்றது.

போதைப்பொருள் தடுப்புப் 23ஆம் பக்கம் பார்க்க

அசாதாரண காலநிலை

## கே.கே.எஸ் - நாகபட்டினம் கப்பல் சேவை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையே பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் கப்பல் சேவையானது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிவகங்கை கப்பல் சேவையின் இலங்கைக்கான இயக்குநர் திரு.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் ஹெரோயினுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - செம்மணி பகுதியில் 2 கிராம் 150 மில்லிக்கிராம் ஹெரோயினுடன் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப் 23ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பொருளாதார மத்திய நிலையம் ஓகஸ்ட் மாதம் முதல் மீண்டும் இயங்கும்

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் மீண்டும் இயங்க ஆரம்பிக்கும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் 23ஆம் பக்கம் பார்க்க

- அரசியல் கட்டுரைகள்
- ஆலடி மாநாடு
- வியாசர் பதில்கள்
- கவிதைக் கலசம்

இன்னும் பல அம்சங்களுடன்
சங்குநாதம்
உள்ளே...

திருகோணமலையில்

## புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்களைத் தேடி அகழ்வு

(திருகோணமலை)

திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பகுதியொன்றில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்களைத் தேடி அகழ்வு நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் 23ஆம் பக்கம் பார்க்க

மீண்டும் தினசரி

## கே.கே.எஸ் – கொழும்பு அதிவேக ரயில் சேவை

(கொழும்பு)

கொழும்பு கோட்டை - காங்கேசன்துறை அதிவேக ரயில் சேவை இந்த மாதத்திற்குள் மீண்டும் தினசரி இயங்கும் என்று இலங்கை 23ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா கூட்டத்தொடர் நாளை ஆரம்பம்

### செப்ரெம்பர் மாத அமர்விலேயே இலங்கை தொடர்பாக அறிக்கை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 59 ஆவது கூட்டத்தொடர் நாளை ஆரம்பமாகி, எதிர்வரும் ஜூலை மாதம் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்.)
**077 138 7596, 071 999 9306**
(4553)

## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு பின்வரும் வேலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வம் உள்ளவர்கள் தங்களது சுயவிபரக் கோவையை 17.06.2025 ஆம் திகதிக்கு முன்னர் கீழுள்ள மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

**Quantity surveyor (female) - QS(HND, NCT - OR Equivalent with 2 years experience)**

Email : kathircons12@gmail.com
Whatsapp : 077 241 7103
(1231)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## வீடு வாடகைக்குத் தேவை

கச்சேரி, மாம்பழம் சந்திக்கு அருகாமையில் மூன்று/ நான்கு அறைகள் கொண்ட தனி வீடு வாடகைக்குத் தேவை.
Note : அறையுடன் கூடிய குளியலறை (Attach Bathroom) கொண்டிருத்தல் கட்டாயமானது.
**077 728 4196**
(4552)

## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும் Printers ஒன்றிற்கு வெல்டர் வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு :
**076 192 3444**
**077 482 1912**
(1227)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
1. சமையல் உதவியாளர் (ஆண்/பெண்)
2. பரோட்டா தயாரிப்பாளர்
3. Delivery Boy
(4551)
**076 982 7517**
பருத்தித்துறை வீதி, 3ம் கட்டை, யாழ்ப்பாணம்.

## LANGUAGE CLASSES

**Professional English**
**Professional Sinhala**

அரச/ தனியார் மற்றும் வங்கி அதிகாரிகள்/ வேலையாட்களிற்கு மிகவும் உகந்தது
- Speaking - Grammar
- Email letter writing Skills
- Corporate/ Telephone Etiquette

பதிவுகளுக்கும் விபரங்களுக்கும்
**076 897 6665, 077 386 7695**
**077 321 1233, 070 686 7695**
APSS INTERNATIONAL
188, K.K.S Road, CHUNNAKAM.
(1230)

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Pizza, Burger செய்பவர்கள் | : 0777432777 |
| Accountant | : 0777611665 |
| Computer Operator (Typing) | : 0766273710 |
| Chef / Room Boy | : 0763057957 |
| Store keeper | : 0752668036 |
| Delivery rider(Jaffna,Vavuniya,Kilinochchi,Trinco) | : 0766233987 |
| ஆடை தொழிற்சாலை வேலை(பெண்கள்) | : 0776040400 |
| தென்னந்தோட்ட பராமரிப்பாளர் | : 0773993535 |
| பகுதி நேர வேலைவாய்ப்பு (பெண்கள்) | : 0776040400 |
| Cashier & Assistant Manager | : 0758588218 |
| All Rounder (Hotel) | : 0777258670 |
| Speech & Language Therapist | : 0775571950 |
| Chef | : 0777983933 |
| Assistant Sales Manager(Basic 60,000) | : 0779969661 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்பில் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com
வேலையாட்கள் தேவையா : 0760984532
DEWMAS, 51, Amman Road, Nallur
(1229)

## சேல்ஸ் பெண்கள் தேவை


எமது ஜவுளி நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர்கள் தேவை. மதிய உணவுடன் தினசரி சம்பளம். நேரில் வரவும். ஞாயிறு மு.ப 10 - பி.ப 1 மணி வரை தெரிவு இடம்பெறும்.
**சென்னை பெசன் வேல்ட்**
63, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
(4554)

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு
- சமையலாளர்
- சமையல் உதவியாளர்

தேவை
ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்.
(C-3199)
**077 729 2840**


# மரண அறிவித்தல்



தோற்றம் 22.03.1946 மறைவு 14.06.2025

## இராசையா இராசநாயகம்

மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசையா இராசநாயகம் அவர்கள் நேற்று 14.06.2025 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தையல்நாயகி அவர்களின் பாசமிகு கணவரும் கௌரிபாலன்(லண்டன்), உமாசங்கர்(செல்வி நகை அகம் - கே.கே.எஸ் வீதி, குளப்பிட்டி சந்தி), கலைச்செல்வி(ஜேர்மனி), ஞானச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும் கஸ்தூரி (லண்டன்), கலைவாணி, ஜெயக்குமார் (ஜேர்மனி), பாஸ்கரன்(அஞ்சல் சேவை உத்தியோகத்தர் - திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கவி (லண்டன்), ஆதவன்(லண்டன்), நவிநயன், அபிநயா, அக்சரன், விதுசா (ஜேர்மனி), லுசாந்(ஜேர்மனி), ஆரணியா (ஜேர்மனி), சதுர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர் இராசலிங்கம் மற்றும் இராஜேஸ்வரன், இரத்தினேஸ்வரன், இரத்தினகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இந்திராதேவி, காலஞ்சென்ற உமாதேவி மற்றும் இந்திரலீலா, சந்திராதேவி, காலஞ்சென்ற சிவகாமசுந்தரி, சுந்தரவதனா, ஈஸ்வரி மற்றும் சிவஞானசுந்தரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

*தகவல்:*
குடும்பத்தினர்
077 749 1895
(4549)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால்,செம்மணி பகுதிகளுக்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செல்ல வேண்டும்- பிரித்தானிய தமிழர் பேரவை

**(கொழும்பு)**

**இலங்கைக்கான பயணத்தின் போது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் வோல்கர் டர்க், 2009 ஆம் ஆண்டு இனப்படுகொலை நடந்த இடமான முள்ளி வாய்க்காலுக்கும், புதைகுழிகள் தோண்டப்பட்ட செம்மணிக்கும், செல்லவேண்டும் என்று பிரித்தானியத் தமிழர் பேரவை, கோரிக்கையை, விடுத்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் வோல்கர் டர்க், இந்த மாதத்தில் இலங்கை வருவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இன்னும் திகதி நிர்ணயிக்கப்படவில்லை.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின், சாட்சிய சேகரிப்பு முயற்சிகளின் கண்டுபிடிப்புகளை உறுதிப்படுத்த, டர்க்கின் இந்த பயணம் உதவும் என்று, பிரித்தானியத் தமிழர் பேரவை டர்க்குக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 7 தசாப்தங்களாக,



தமிழர் மீதான அட்டூழியக் குற்றங்களின் வடுக்கள் மற்றும் தொடர்ச்சியான தாக்கங்களை மறைக்க அடுத்தடுத்த இலங்கை அரசாங்கங்கள் முயற்சிக்கின்றன.

அத்துடன், இலங்கையின் தமிழ் சமூகங்கள் அரச அடக்கு முறை மற்றும் முறையான துஷ்பிரயோகங்களின் விளைவுகளைத் தொடர்ந்து எதிர்நோக்கி வருவதாக, பிரித்தானியத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் வி.ரவிக்குமார் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இலங்கைக்கான பயணத்தின் போது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் வோல்கர் டர்க், வடக்கு கிழக்கின் பல இடங்களுக்கும் சென்று, தமிழ் பொதுமக்கள், காணாமல் போனவர்களின் உறவினர்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை நேரடியாகச் சந்திக்க வேண்டும் என்றும், வலியுறுத்தியுள்ளார். (நி-8)

# பதற்றத்தைத் தணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்

## இஸ்ரேல் மற்றும் ஈரானிடம் இலங்கை வேண்டுகோள்

(கொழும்பு)

இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய இருநாடுகளையும் நிதானத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுமாறும், பதற்ற நிலையைத் தணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் இலங்கை அரசாங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடையிலான சமீபத்திய பதற்றங்கள் தொடர்பில் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியிருக்கும் வெளிவிவகார அமைச்சு, அவ்விரு நாடுகளிலும் உள்ள இலங்கைத் தூதரகங்களின் நிலைமையை உன்னிப்பாக அவதானித்துவருவதாகத் தெரிவித்துள்ளது.

அத்தோடு அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைப் பிரஜைகளுடன் தொடர்பில் இருப்பதாகத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சு, அவர்களை மிகுந்த எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.



மேலும் இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய இருநாடுகளிடமும் நிதானத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுமாறும், பதற்றநிலையைத் தணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள்விடுத்துள்ளது. (நி-8)

# ஜனாதிபதி நிதிய சேவைகளை இணைய வழியில் வழங்க திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளும் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் இணைய வழியில் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி நிதியிலிருந்து பொதுமக்களுக்கு மருத்துவ உதவி வழங்கும் சேவைக்கான விண்ணப்பங்கள் கடந்த பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்கள் ஊடாகவும் பெற்றுக் கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டன.

இதேவேளை, இந்த வேலைத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதால், ஜனாதிபதி நிதியத்தின் ஏனைய சேவைகளையும் இவ்வாறு விரிவுபடுத்த அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, வறுமை ஒழிப்பு நிவாரணங்கள், கல்விப் புலமைப்பரிசில் வழங்குதல், கல்வியில் சிறந்து விளங்கும் பிள்ளைகளைப் பாராட்டுதல், விசேட தேவைகள் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள், காட்டு யானைகளால் பாதிக்கப்படும் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் நிவாரண உதவித்தொகை, தேசிய அளவில் அல்லது நாட்டிற்காக சேவை செய்தவர்களைப் பாராட்டுதல், விபத்துகள் மற்றும் அனர்த்தங்களின் போது வழங்கப்படும் நிவாரணங்கள் உள்ளிட்ட ஜனாதிபதி நிதியத்தினால் செயற்படுத்தப்படும் அனைத்து சேவைகளுக்கும், பொதுமக்களுக்கு நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்களின் ஊடாக இணைய வழியில் விண்ணப்பிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# 180 மருந்துகளுக்கு தட்டுப்பாடு

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

மத்திய மருந்து சேமிப்பு மையங்களில், சுமார் 180 அத்தியாவசிய மருந்துகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சமில் விஜேசிங்க, இதனைக் குற்றச்சாட்டாக முன்வைத்துள்ளார்.

அதேநேரம், மருத்துவமனைகளுக்குள், சுமார் 50 வகையான அத்தியாவசிய மருந்துகள் பற்றாக்குறையாக உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வலி நிவாரணிகள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் சிறுநீரகம் தொடர்பான மருந்துகளும் பற்றாக்குறையாக உள்ளன.

புற்றுநோய் சிகிச்சை மருந்துகளின் பற்றாக்குறை அதிகரித்து வருவதாகவும் விஜேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் அரச மருத்துவ அதிகாரிகளின், இந்த குற்றச்சாட்டுக்களுக்கு, அரசாங்கம் விரைவில் பதிலளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)

# நாட்டை வந்தடைந்த துருக்கிக் கப்பல்

(கொழும்பு)

துருக்கிய கடற்படைக் கப்பலான "டி.சி.சி. புயுகடா" உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. நேற்று சனிக்கிழமை நாட்டை வந்தடைந்த இக்கப்பல் இலங்கை கடற்படை மரபுகளுக்கமைய வரவேற்கப்பட்டது.

இக் கப்பலானது 99.56 மீற்றர் நீளமும், மொத்தம் 147 அங்கத்தவர்களை கொண்டதாகும்.


மேலும் இக்கப்பல் தனது உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு நாளை திங்கட் கிழமை நாட்டிலிருந்து புறப்பட உள்ளதுடன், மேலும் இலங்கை கடற்படைக் கப்பலுடன் மேற்கு கடற்படை கட்டளைப் பகுதியில் கடற்படைப் பயிற்சியில் ஈடுபடவும் திட்டமிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் யாழ் மாணவர்கள் சாதனை









இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினரால் நடத்தப்படும் தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு தியகம மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இப் போட்டிகளில் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி மற்றும் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவர்கள் தங்கம், வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

இந்த வகையில் கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாவணன் ந. டன்ஸ்சன் 4.30 மீற்றர் உயரம் வரை பாய்ந்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

20 வயதிற்குட்டபட்ட பெண்களுக்கான கோலூன்றிப்பாய்தலில் அளவெட்டி அருணோதயக்கல்லூரி மாணவி எஸ். நிருஷிகா 3.40 மீற்றர் உயரம் வரை பாய்ந்து தங்கப்பதக்கத்தை தக்கைப்பற்றிக் கொண்டதுடன் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மற்றுமொரு மாணவி எஸ். டிலக்சிகா 3.10 மீற்றர் உயரம் வரை பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றிக் கொண்டனர்.

18 வயதிற்குட்பட்ட பெண் களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி பி. சண்முகம் பிரியா 2.40 மீற்றர் உயரம் வரை பாய்ந்து வெண் கலப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார்.

இந்த வகையில் யா/ ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஒரு தங்கப் பதக்கத்தையும், அளவெட்டி அருணோதயக் கல்லூரி 1 தங்கம், 2 வெண்கலப் பதக்கங்களையும் வென்று சாதனைபடைத்துள்ளனர். (நி-3-90)

# பாலஸ்தீனர்களுக்காக பிரார்த்தனை ; கால்பந்தாட்ட வீரருக்குச் சிக்கல்



ஆசிய கால்பந்து கூட்டமைப்பு நடத்தும் கால்பந்து ஆசியக் கோப்பை தகுதிச் சுற்று போட்டியில், தரவரிசையில் முன்னிலை யில் இருந்த சீன தாய்பே அணியை 3-1 என்ற கணக்கில் தோற்கடித்து இலங்கை அணி அபார வெற்றிப்பெற்றுள்ளது. சீன தாய்பே அணிக்கு எதிராக 3-1 என வெற்றிபெற்றதன் மூலம் இலங்கை மட்டுமே, தென்னாசிய பிராந்தியத் திலேயே ஒரே வெற்றியடைந்த நாடாக உள்ளது.

இந்தநிலையில், சீன தாய்பே அணிக்கு எதிரான போட்டிக்குப் பிறகு, இலங்கை அணியின் மாற்றுப் பங்கேற்பாளர் முகம்மட் நிஹாம் பாலஸ்தீனத்தின் சுதந்திரத்திற்காக பிரார்த்தனை செய்யுங்கள் ("PRAY FOR FREE PAL ESTINE") என எழுதப்பட்ட ஜெர்சி அணிந்திருந்தார். இந்த விடயம் தற்போது பேசு பொருளாகியுள்ளது.

இதைப் பற்றி இலங்கை கால்பந்துச் சம்மேளனத்தின் தலைவரான ஜஸ்வர் உமர் கூறுகையில்,

"இது சம்மேளனத்தின் அனுமதியின்றி நடைபெற்ற செயல். இது தெளிவற்றதுடன், உலக கால்பந்து ஒழுங்கு விதிகளுக்கும் புறம்பானது. அந்த வீரர் திறமையானவர் ஆனால் அனுபவமற்றவர்.

இருப்பினும் இதற்காக மன்னிக்க முடியாது. இந்தச் செயலுக்கு ஒழுங்கு நட வடிக்கை எடுக்கப்படும், பன்நாட்டு கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பு எனத் தெரிவித்துள்ளார். விதிகள் படி, போட்டிகளின் போது அரசியல், மத அல்லது சமூக செய்திகளை உடைகள், பேனர்கள் மூலம் வெளிப்படுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

இது ஆட்ட நெறி முறைகளின் மீறலாக கருதப்படும். "PRAY FOR FREE PALESTINE" போன்ற எழுத்துகள் கொண்ட சிறப்பு ஜெர்சிகள் அல்லது ரிஷேர்ட்கள் அணிவது, அணியின் அனுமதியின்றி அல்லது FIFA அங்கீகாரம் இல்லாமல் செய்தால், ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுவார்கள்.

அல்லது போட்டியிலிருந்து இடை நிறுத்தப்படும் வாய்ப்பு, அணிக்கு அபராதம், வீரருக்கு தடை அல்லது பன்நாட்டு போட்டி களில் பங்கேற்க தடை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-3)

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 08 - 1942



மறைவு
14 - 06 - 2025

## பண்டிதர் வீ.பரந்தாமன்

புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் வீரகத்திப்பிள்ளை பரந்தாமன் அவர்கள் நேற்று (14.06.2025) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை - பார்பதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற சொர்ணாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் முல்லை (மருத்துவர், ஆதார வைத்தியசாலை - பருத்தித்துறை), பொன்முடி (ஆசிரியர், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் - யாழ்ப்பாணம்), அந்தணன், புலவன் ஆகியோரின் தந்தையும் பரமேஸ்வரன் (ஆய்வு உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம் - கைதடி), ராகவன் (தொழிற்றுறை மேம்பாட்டு அலுவலர்), பிறிஷானி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை)ஆகியோரின் மாமனாரும் கணியன், மாதுளன், சேந்தன், நிலவன், அங்கணன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சிறிஅகிலாண்டதரநாதன் மற்றும் திருமதி.செ.கிருஷ்ணவேணி, திரு.சிறிஜெகரட்சகமூர்த்தி, திரு.சிறிஅனாதரட்சகமூர்த்தி, திரு.சிறிஞானசுந்தரம், காலஞ்சென்ற திரு.சிறிவீரகனககுமார் மற்றும் கிருஷ்ணராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்கமானது நாளை 16.06.2025 திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

"தமிழ் வளர்சோலை",
புலோலி தெற்கு,
புலோலி.

(4555)

தகவல்:
குடும்பத்தினர்
077 723 6160

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதவிக்காக உயிர்வாழும் தமிழ் அரசியல்வாதிகள்




## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம்

**(வவுனியா)........................................**

**தமிழ் அரசியல்வாதிகள் எந்த தொலை நோக்கு பார்வையும் இல்லாதவர்கள். இதனால் நாங்கள் அவர்கள் மீது நம்பிக்கை வைக்கவில்லை என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

வவுனியா ஏ9 வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கொட்டகை முன்னால் நேற்று அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

போரின் இறுதிக் கட்டத்தின் போதும் அதற்குப் பின்னரும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தமிழ் தாய்மார்களான எங்கள் போராட்ட பயணம் தொடர்கிறது.

எங்கள் குழந்தைகளை கண்டுபிடிக்க வேண்டுமென்ற தவிப்போடு மட்டுமன்றி, இனப்படுகொலையிலிருந்து எதிர்காலத் தலைமுறையினரைப் பாதுகாக்கவும், தமிழர் இறையாண்மைக்கு சர்வதேச ஆதரவைக் கோரவும், அமெரிக்க ஐரோப்பிய ஒன்றியம் ஒரு காலத்தில் எங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

அரசியல் தீர்வு ஒன்று தேவை என யுத்தத்தின் போது இலங்கை அரசுக்கும் அதன் பின்னணியில் இருந்த பங்களிப்பாளர்களுக்கும் ஐரோப்பிய ஒன்றியம், வாக்குறுதி அளித்தது. ஆனால் இன்று வரை எந்தத் தீர்வும் இல்லை. எங்கள் கண்ணீர் மட்டும் தொடர்கிறது.

நாங்கள் தமிழ் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை வைக்கவில்லை. அவர்களின் ஒரே குறிக்கோள் பதவியில் உயிர்வாழ்வது என்று தெரிகிறது. அவர்கள் எந்த தொலைநோக்கு பார்வையையும், தைரியத்தையும், சர்வதேச ஈடுபாட்டின் மூலம் இறையாண்மையைப் பெற்ற பிற ஒடுக்கப்பட்ட நாடுகளிடமிருந்து கற்றுக்கொள்ள எந்த முயற்சியையும் காட்டவில்லை.

அவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தைப் பொறுப்பேற்க வைக்கவோ அல்லது போருக்குப் பிறகு தமிழ் மக்கள் அனுபவித்த துரோகத்தை சர்வதேச சமூகத்திற்கு நினைவூட்டவோ தவறிவிட்டனர்.

எனவே தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள ஒவ்வொரு தமிழரும் எழுந்து சர்வதேச ஈடுபாட்டைக் கோர வேண்டும் என்றும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்.

தமிழர் இறையாண்மை மட்டுமே தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும், முழுக் குடிமக்களுக்கும் நிலையான அமைதியை கொண்டு வரும் என அவர்கள் தெரிவித்தனர். (நி-250)


### அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தையில் நாள்,வார,மாத அடிப்படையில் அறைகள் வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு:
S.சற்குணராஜா
ஓய்வுநிலை பிரதி கல்வி பணிப்பாளர்.
077 540 6266, 071 836 1710

### நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவை 10 வருட உத்தரவாதத்துடன் சீர் செய்கின்றோம். நீங்கள் இரசாயனப் பொருட்களைப் பெற்று எமது தொழில் நுட்ப உதவியுடன் சீர் செய்யலாம்.

கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு விலைக்கழிவு உண்டு.

தரம் குறைந்த போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

உலகத்தரம் மிக்க இரசாயனப் பொருட்கள் Finex ஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகத்தர்கள். முதன் முதலில் வட மாகாணத்தில் அறிமுகம் செய்தவர்கள்.

(நி-4546)

North and East Engineering
55 Stanly Road,Jaffna,Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

### இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368

No.139, Main Street Jaffna.
யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்
(முன்பதிவு செய்து வரவும்)
(4547)

### மீசாலை கிழக்கில்

காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கில் வீடு கட்டுவதற்கு அல்லது வியாபாரத்திற்கு சிறந்த 5 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு.
தொடர்பு 0776 544 540 (தரகர் தேவையில்லை)


# இராசிபலன்

15.06.2025
ஆனி 01, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 2.57 மணிவரை
திருவோணம் பின்னிரவு 12.14 மணிவரை

சுபநேரம் 8.53-10.23 மணிவரை
இராகுகாலம் 4.23-5.53 மணிவரை
சர்வதேச தந்தையர் தினம்

சந்திராஷ்டமம் - திருவாதிரை,புனர்பூசம்.

வளவன்


மேஷம்

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கௌரவமான நாள்.


கடகம்

சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு இடம் பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


துலாம்

செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு.


மகரம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொட்ட காரியங்களில் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.


ரிஷபம்

குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் குறையும், நண்பர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு


சிம்மம்

சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், எதிரிகள் விலகுவார், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் போட்டிகள் மாறும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


விருச்சிகம்

சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவார்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், வளர்ச்சி கூடும் நாள்,


கும்பம்

சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, மாற்றங்களால் ஏற்றமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்


மிதுனம்

உறவினர் விவகாரங்கவில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, வரவைக் காட்டிலும் விரயம் மேலோங்கும் நாள்.


கன்னி

தொழிலில் அதிகாரிகளின் ஆதரவு பெருகும், நீண்டநாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மன நிறைவு கூடும் நாள்.


தனுசு


கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.


மீனம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

கொடுக்கல் வாங்கல்களுக்கு நன்மைகள் அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மறைமாவட்ட ஆயர் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மாலை தேர்ப்பவனியும் இடம்பெற்றது. (படம்:சிவசாந்தன்)

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் நேற்று சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தின் இணைப்பாளராக சுந்தரமூர்த்தி கபிலன் அவர்களுக்கான நியமனக் கடிதம் அமைச்சரால் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன், பிரதம கணக்காளர் எஸ் கிருபாகரன், அமைச்சர் அவர்களின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் பங்குபற்றினார்கள். (நி-3)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிவஸ்ரீ க.ஜங்கரன் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜீலை மாதம் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இரதோற்சவமும், 2 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும், அன்று இரவு கொடியிறக்கமும் இடம்பெற்று 4 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை வைரவர் வீரபத்திரர் பொங்கலும் இடம் பெறவுள்ளதென ஆலய பிரதம குரு சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார். (நி-3)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்: ரோகிணி
கி.பா:70 1/4
உயரம்: 6"
தகைமை/தொழில்: BSc, Executive officer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15635

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்:சதயம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L ,கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15636

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 04
உயரம்:6"
தகைமை/தொழில்:BSc, Software Engineer
எதிர்பார்ப்பு: கனடா மட்டும்
தொ.இ: B/15639

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா:14 1/2
உயரம்:5'9"
தகைமை/தொழில்: A/L,Supervisor
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/15640

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா: 74
7 இல் சூரி செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: IT, IT Officer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15643

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 28 1/2
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bsc, TutionTeacher
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/15678

பிறப்பு: 1989 RC
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 65
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L , Cleark
எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்
தொ.இ: G/15679

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
7 இல் செவ்
கி.பா: 18 ½
உயரம்: 5'4"
தகைமை/ தொழில்: BSc, MSc, (Aus)
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15680

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: MBBS(final year)
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15682

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:பூரம்
7 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, Accountant (London)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15686

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்




# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 350 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 700 | 650 | 650 | 800 |
| தக்காளி | 400 | 550 | 500 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 250 | 280 | 250 |
| கோவா | 400 | 600 | 550 | 350 | 600 |
| கரட் | 800 | 750 | 800 | 700 | 800 |
| பூசணி | 120 | 180 | 150 | 130 | 150 |
| புடோல் | 180 | 150 | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-350 | 400 | 380 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 130 | 150 | 150 |
| பாகற்காய் | 650 | 500 | 800 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 100 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 200 | 300 | 200 |
| லீக்ஸ் | 350 | 400 | 450 | 350 | 600 |
| பீற்றூட் | 600 | 550 | 550 | 350 | 600 |
| கறிமிளகாய் | 850 | 700 | 500 | 550 | 1000 |
| முருங்கைக்காய் | 1500 | 1800 | 1200 | 1250 | 2000 |
| போஞ்சி | 600 | 650 | 600 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 150 | 350 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 60-120 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 120 | 350 | 400 | 280 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 100-180 | 150-180 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 500 | 600 | 700 | 800 |
| முள்ளங்கி | 250 | 200 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 140 | 100 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 497
15.06.2025
பக்கம் 07

# இதனால் இது முடியுமெனில்



குருசேத்திரம்
-விதுரன்


# அனைவரும் ஒன்றாகினால்...

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்த நிலையில், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தி முடித்தார்.

தேர்தலுக்குப் பின்னர் நம் மக்கள் வழங்கிய ஆணை, தமிழ் அரசியல் தரப்புக்களைத் திணற வைத்துள்ளது.

ஆம், தமிழ்த் தரப்பில் இதுகாறும் ஒற்றுமைப்பட மறுத்து வந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன முன்னெப்போதும் இல்லாத அளவில் குழப்ப மடைந்துள்ளன.

குழம்பத்திற்குக் காரணம் இனப்பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காண முடியவில்லை என்பதோ அன்றி காணாமல் போனவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என்பதோ





அல்லது இளைஞர் யுவதிகள் ஆன வேலை வாய்ப்பின்றி வீணே இருக்கிறார்கள் என்பதோ அல்ல.

மாறாக, உள்ளூராட்சிச் சபைகளில் அரைகுறையாகப் பெற்ற ஆசனங்களால் ஆட்சி அமைக்க முடியவில்லை என்பதே அவர்களின் குழப்பத்திற்குக் காரணமாயிற்று.

இங்கு தான் என்ன செய்வது, ஏது செய்வது என்று தெரியாமல் அங்குமிங்கும் ஓடினார்கள். யாரிடம் ஆதரவு கேட்பது என்ற போட்டி வந்த போது இரு தரப்பும் யாரையெல்லாம் எதிர்த்தார்களோ-வசை பாடினார்களோ அவர்களிடம் எல்லாம் ஆதரவு கேட்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

இந்த முடிவை எடுப்பதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி எந்த வகையிலும் காரணமல்ல.

மாறாக, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குமிடையிலான கடும் போட்டியே காரணமாயிற்று.

அதாவது ஒரு கட்டத்தில் இரண்டு தரப்பும் சந்தித்துக் கொண்டன.

ஆம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் எம்.ஏ. சுமந்திரனும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சந்தித்துப் பேசினர்.

சந்திப்பு சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்றதேயன்றி மற்றும்படி இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண்ட நம்பிக்கை என்பது எதிர்க்கணியப் பெறுமானத்திலேயே இருந்தது.

கூடிய ஆசனங்களைப் பெற்றவர்கள் ஆட்சியமைப்பது என்ற கருத்தை தான் முன்வைத்ததாகவும் அதற்கு சாதகமான பதில் கிடைக்காததாலேயே அந்தச் சந்திப்பு வெற்றி பெறவில்லை என்பதும் எம். ஏ.சுமந்திரனின் கருத்தாக இருந்தது.

இப்போது இரு தரப்புச் சந்திப்பும் தோல்வியில் முடிந்ததும், கட்சிகளுக்கிடையிலான போட்டி, இரண்டு வழக்குரைஞர்களுக்கிடையிலான போட்டியாக விஸ்வரூபமெடுத்தது.

ஆம், நீயா! நானா! என்ற கட்டத்திலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியுடன் (சங்கு) உடன்படிக்கை செய்து கொண் டார். எனினும் மேற்படி உடன்படிக்கையை எம்.ஏ.சுமந்திரன் எதிர்பார்த்திருக்கவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த சுமந்திரன் நீங்கள் இரண்டடி பாய்ந்தால், நான் நான்கடி பாய்ந்து காட்டுகிறேன் பார் என்ற சபதத்தோடு தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் அவர்களை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தவிடம் தூது அனுப்பினார்.

இங்குதான் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் மதிநுட்பம் வெளிப்படுகிறது.

அதாவது டக்ளஸ் தேவானந்தவிடம் ஆதரவு கேட்கும் போது தான் நேரில் செல்லாமல், சீ.வி.கே.சிவஞானத்தை அனுப்பியிருந்தார்.

அதேநேரம் தமிழ் மக்கள் கூட்டணியிடம் (மான்) ஆதரவு கேட்கும் விவகாரத்தை எம்.ஏ. சுமந்திரன் தானே நேரடியாகக் கையாண்டார்.

ஆம், கொழும்பிலுள்ள நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் வீட்டிற்கு நேரில் சென்று உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

தனது ஆசிரியரின் வீட்டிற்குச் செல்வதில் எந்தத் தவறும் இல்லை. அதுவே நியாயமானது என்ற அடிப்படையில், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நடந்து கொண்டார்.

மேற்படி இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய இருதரப்பும் தத்தம் சிந்தனையில் உடன்பட்டதன் விளைவாக, யாழ்ப்பாண மாநகர சபை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வசமாக, நல்லூர் பிரதேச சபை மானுக்குரியதாயிற்று.

இதேபோல சாவகச்சேரி நகர சபை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு உரியதாகியது.

நல்லது இரண்டு தரப்புக்கள் ஏனைய தரப்புகளுடன் ஒற்றுமைப்பட்டதன் விளைவாக உள்ளூராட்சி சபைகள் ஆட்சி அமைக்கின்ற விவகாரம் மிகவும் சுமூகமாக நிறைவுக்கு வந்துள்ளது.

இந்த ஒற்றுமைப்படும் பட்டறிவை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற விடயத்திலும் பிரயோகித்தால் எங்களின் உரிமைப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண முடியும்.

ஆம், உங்களின் பதவிகளுக்காக ஒன்று சேர்ந்த நீங்கள் தமிழ் மக்களுக்காகவும் ஒன்று சேர்வீர்களாயின், எங்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் எந்தக் கடினமும் இருக்காது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



சிவஸ்ரீ
பரமேஸ்வரக் குருக்கள்
மனோகரக்குருக்கள்



## தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்கு எல்லோரும் சேர்ந்து முடிவு காணுங்கள்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செய்து அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவராக நீண்ட காலம் இருந்த சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் மனோகரக் குருக்கள் அவர்கள் இறையடி சேர்ந்துவிட்டார்.

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவராக இருந்து மனோகரக் குருக்கள் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது.அமைதியைக் குலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:-** தையிட்டி விகாரைப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லைப் போல.

**விதானையார்:-** தையிட்டி விகாரைக்கு எப்படியும் ஒரு தீர்வு கண்டே ஆக வேணும்.

விகாரையை உடைப்பது தான் தீர்வு எண்டு யார் நினைத்தாலும், அது தமிழ் மக்களுக்கு அழிவை ஏற்படுத்துவதாகவே இருக்கும்.

அதைவிட, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அல்ல யார் ஜனாதிபதியாக வந்தாலும் தையிட்டி விகாரையை உடைத்து அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென நினைக்க மாட்டினம்.

ஆகையால எல்லோரும் சேர்ந்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தாக வேணும்.

**கங்காணி:-** விதானையார் சொல்லுறதில நூறு வீதம் உண்மை இருக்குது. தொடர்ந்து தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதென்பது எங்கட பிரச்சினையை நாங்களே திசைதிருப்புகிறதாகிப் போய்விடும்.

அதேநேரம் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராகத் தொடர்ந்து போராட்டம் நடத்தும் போது, அது சர்வதேச ரீதியிலும் எங்களைப் பிழையானவர்களாகவே காட்டும்.

ஆகையால, ஒண்டில் தையிட்டி விகாரை அமைந்த காணியின் உரிமையாளர்கள் நீதிமன்றத்தை நாடி; தங்களுடைய காணியில் சட்டவிரோதமாக விகாரை கட்டப்படிருக்கிறது. எங்களுடைய காணி எங்களுக்குத் தேவை என வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்.

அதைச் செய்யாவிடின், இனி மேல் இப்படி சட்ட விரோதமாக விகாரைகளை அமைக்கக் கூடாது என்ற இறுக்கமான நிபந்தனைகளின் அடிப்படையில மாற்றுத் தீர்மானம் ஒன்றுக்கு வருவது. இது தான் ஒரே வழி.

இவ்வாறு கங்காணியார் கூறியதும் ஆலடி அமைதியாகியது.

அமைதியைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** கடந்த கால ஆட்சியில நடந்த ஊழல்கள் தொடர்பில இடம்பெறுகின்ற கைதுகளும் விசாரணைகளும் அநுர அரசு மீது நம்பிக்கையை ஏற்படுத்தி வருகிறது.

இந்தாப் பாருங்க, இல்லாத வீட்டிற்கு சமல்ராஜபக்ஷ நட்ட ஈடு பெற்றதான தகவல் வெளியாகி இருக்குது. இதுபோல ஏகப்பட்ட ஊழல் மோசடிச் சம்பங்கள் இந்த நாட்டில நடந்துள்ளது.

அதேநேரம் இத்தகைய ஊழல் மோசடிகள் நாட்டின் எந்தப் பாகத்தில நடந்தாலும் அது தொடர்பில விசாரணை நடத்த வேணும்.

**சிறாப்பர்:-** சாத்திரியார் சொன்னது போல இப்ப செம்மணிப் புதைகுழி விவகாரம் சூடுபிடித்துள்ளது.

எனவே செம்மணியில மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பில அரசாங்கம் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு அந்த எலும்புக் கூடுகள் யாருடையவை என இனங்காணும் போது, அதிலிருந்து நிறைய உண்மைகள் வெளிவரும்.

அதேநேரம் செம்மணியில இராணுவ முகாம் இருந்த காலத்தில அங்கு பணியாற்றிய இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினரிடம் விசாரணைகளை மேற்கொள்வதன் மூலமும் செம்மணிப் புதைகுழியில மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பான தகவல்கள் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் உண்டு.

ஆகையால, இது விடயத்தில அநுர அரசு உண்மையைக் கண்டறிவதில எந்த வகையிலும் பின்னடிக்கக் கூடாது.

இவ்வாறு, சிறாப்பர் கனகசபை கூற, அதனைத் தாமும் அங்கீகரிப்பது போல ஆலடியில் இருந்தவர்கள் அமைதியாகினர். அமைதியை குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** மாணவர்களுக்கு நீச்சல் பழக்குகிறமை தொடர்பில் கடந்த ஆலடி மாநாட்டில பிரஸ்தாபித்திருந்தனாங்கள்.

எங்கட பிள்ளைகளுக்கு நீச்சல் தெரியாத காரணத்தால, எங்கட மண்ணில அநியாயமான மரணங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆகையால மாணவர்களுக்கு நீச்சல் பழக்குகிறது தொடர்பில ஒவ்வொரு மாவட்ட அரசாங்க அதிபர்களும் நடவடிக்கை எடுக்க வேணும்.

அந்த நடவடிக்கையை மாவட்ட அரச அதிபர்கள் தத்தம் பிரதேச செயலர்களுடன் ஆராய்ந்து நடைமுறைப்படுத்தினால், அதால எங்கட எத்தனையோ பிள்ளைகளின்ர உயிர்களைப் பாதுகாக்க முடியும்.

அதேநேரம் இது விடயத்தில ஒவ்வொரு வலயக் கல்விப் பணிப்பாளர்களும் பாடசாலை அதிபர்களும் கருசனை கொண்டு அனைத்து மாணவ, மாணவியர்களும் நீச்சல் பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேணும்.

இவ்வாறு கங்காணி கார்த்திகேயன் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


ஆநந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பின் வியாசரே தமிழர் கட்சிக்கு பதவி முக்கியமா? தமிழ் மக்களின் உரிமை முக்கியமா?



பெண்ணியம் என்றால் என்ன வியாசரே?

**எல்லாத் தமிழ் கட்சிகளும் ஒன்று சேர்ந்தால் எல்லாம் வெற்றி தானே?**

*குமார் - யாழ்ப்பாணம்*

வெற்றி உண்டாகும்தான். ஆனால் நாம் கொள்கை அளவில் பிரிந்து நிற்பது போல இருக்கும். அங்கு கொள்கையாவது மண்ணாங்கட்டியாவது என்பது தான் எம் தலைவர்களின் மனநிலை.

தமிழினம் எக்கேடு கேட்டுப் போனால் எமக்கென்ன, நாம் பதவி எனும் பேராசை கடலில் மூழ்கியிருப்போம் என்பதுதான் அவர்களின் எழுதாதவிதி. அதுவே தமிழினத்தின் தலைவிதி.

பூனையில்லாத வீட்டில் எலி சன்ன தமாட்டிச்சாம். இருக்கிறவர்கள் இருந்திருந்தால் இப்போது தமிழ்த் தேசியம் பேசுற பலர் இருந்திருக்கமாட்டினம். இல்லாட்டி கொழும்போட செற்றிலாகியிருப்பினம்.

**பெண்ணியம் என்றால் என்ன வியாசரே?**

*தீபன்-பருத்தித்துறை*

பெண்களைத் தாழ்வுபடுத்தி அவர்கள் உரிமைகளை முடக்கி அவர்களை அடுப்பங்கரையில் முடங்க வைக்கும் செயற்பாடுகளுக்கு எதிரான செயற்பாடுகளை பெண்ணியம் என்கிறோம்.

ஆனால் அவை தற்போதைய சமூகத்திடம் தவறான தீர்பை ஏற்படுத்திவிட்டது.

பெண்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள். பெண்களே இந்த உலகின் அச்சாணி. அதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஆண்கள் போல உடை அணிவது, ஆண்களுடன் சரிசமமாய் வேலை செய்வது, ஆண்கள் சபையில் அவர்களுடன் விவாதம் புரிவது இவைதான் பெண்ணியம் என்று திரிகினர் ஒரு சில குழுக்கள்.

இவ்வாறு தவறான புரிதலை ஏற்படுத்தி பெண்களைத் தூண்டி விடுவதில் அரச சார்பற்ற சில நிறுவனங்களுக்கு முக்கிய பங்குண்டு என்பது மறுக்க முடியாத ஒன்று.

**பத்திரிகைகள் முழுவதும் விளம்பரம் நிறைப்பது குறித்து தாங்களின் கருத்து என்ன வியாசரே?**

*பிரியா-யாழ்ப்பாணம்*

வருமானம் வருகிறதே என்பதற்காக செய்திகளைத் தவிர்த்து விளம்பரங்களால் பத்திரிகையை நிறைத்தால், அது பத்திரிகைகளின் வீழ்ச்சியாகவே இருக்கும்.

ஐம்பது ரூபா கொடுத்து பத்திரிகை வாங்கும் வாசகரைத் திருப்திப்படுத்தும் வகையில் செய்தியிடல் இருக்க வேண்டும்.

உங்கள் தேவையை நீங்கள் வாங்கும் பத்திரிகை பூரணப்படுத்துகிறதா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் நீங்களே.

**மனைவி என்பது போல பெண்களை அழைக்கும் சொற்கள் எவை என்று கூற முடியுமா?**

*தவராஜன்-பூவோடை -கொற்றாவத்தை*

மனைவி, துணைவி, இணைவி, முனைவி, புணைவி, இல்லத்தரசி, தாரம், தாட்டி, வல்லவி, வனிதை, வீட்டா, கடகி, கற்பாள், காந்தை, கிருகம், பாரியாள், பொருளாள், கண்ணாட்டி, வதுகை, சீமாட்டி, ஆரியை, சையோகை, தம்பிராட்டி, தம்மேய், மணவாளி, நாச்சி, பெண்டு, இல்லாள், மணவாட்டி, பத்தினி, தலைவி, அன்பி, இயமானி, அகமுடையாள், நாயகி, பொண்டாட்டி, ஆயந்தி, மகடூஉ, மனைக்கிழத்தி, குலி.

இவ்வாறு இன்னும் ஓராயிரம் சொற்பதங்கள் இருந்தாலும் மனிசி என்பதில் வாற சுகம் வேறெதிலும் இருக்கவே இருக்காது.


அன்பு
வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
0076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்


**தீராத முழங்கால் வலிக்கு ஏதும் மருத்துவம் கூற முடியுமா வியாசரே?**

*மீனலோஜினி - முல்லைத்தீவு*

ஒரு துண்டு இஞ்சியை எடுத்து அதை அரைத்து ஒரு கப் தண்ணீரைச் சேர்த்து நன்கு கொதித்ததும் வடிகட்டி ஆறவைத்து அதில் இரண்டு மேசைக்கரண்டி சுத்தமான தேன் சேர்த்து ஒரு வாரம் குடிக்க முழங்கால் வலி குறையும்.

இது சாதாரண முழங்கால் வலிக்கான நிவாரணியே. தொடர்ந்து வலி நீடிக்குமானால் வைத்தியரை நாடுவதே சிறப்பு.

**ஆண்-பெண் நட்பு சமூகத்தினிடையே தவறான புரிதலை ஏற்படுத்துமா வியாசரே?**

*அபிநஜா-திருவையாறு*

எதிர்ப்பால் நட்புறவு எமது சமூகக் கட்டமைப்பிற்கு ஏற்ற விடயம் அல்ல என்பது இங்கு முதன்மையானது.

ஆண்-பெண் நட்புறவு என்பது கத்தியில் நடப்பதைப் போன்றது.

அந்த நட்பு மிக நீண்ட தூரம் செல்லாது. அவ்வாறு செல்லுமாக இருந்தால் அது நட்பு என்ற எல்லைக் கோட்டை தாண்டிய பயணமாகவே இருக்கும்.

இல்லை நாம் சாகும் வரை நட்பாகவே இருப்போம் என்று சிலர் உறுதியாக இருப்பர். ஆயினும் இந்தச் சமூகம் அந்த நட்புறவுக்கு கண்-காது-மூக்கு வைத்து கதைத்து சரிக்கட்டி விடுவார்கள்.

**R.C.Bகிண்ணம் வென்றதற்கான வெற்றிக் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் பொதுமக்களின் பாதுகாப்பை கவனிக் காமல் விட்டது ஏன் வியாசரே?**

*பிரவீன்ஸ் - பருத்தித்துறை*

புஸ்பா - 2 திரைப்பட வெளியீட்டு விழாவில் அப்படத்தின் கதாநாயகன் அல்லு அர்ஜுன் அறிவித்தலின்றி பொது வெளியில் வந்தார் என்றும் அதால் ஏற்பட்ட சன நெரிசலில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் அவரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அதே நடைமுறை ஹைதராபாத் வெற்றிக் கொண்டாட்டத்தில் நடைமுறைப்படுத்தாதது ஏன் என்ற கேள்வி ரசிகர்களிடம் எழுந்துள்ளது.

சரியான பாதுகாப்பு ஒழுங்கை மேற்கொள்ளாதது அந்த நிகழ்வின் ஒழுங்குபடுத்துநர்களின் தவறே. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தானே முறை.

**அன்பின் வியாசரே தமிழரசுக் கட்சிக்கு பதவி முக்கியமா? தமிழ் மக்களின் உரிமை முக்கியமா?**

*சிவயோகன் - புளியங்குளம்*

நாயகன் எனும் திரைப்படத்தில் கமலைப் பார்த்து அவரின் பேத்தி கேட்பாள் நீங்கள் நல்லவரா? கெட்டவரா? என்று.

அதற்கு கமல் ஒரு றியாக்ஷன் கொடுப்பார். அக்கணம் திரையரங்கமே அவரின் நடிப்பில் மயங்கி அமைதி கொள்ளும்.

அதே போல தான் தமிழரசின் நடிப்பும். பிரமிக்க வைக்கிறது. இதில் ஒரு விசேடம். மகா நடிகன் கமலை விட நூறு மடங்கு அதிகமாக நடிக்கிறது தமிழரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமை

நான் என்னிடமே கதைத்து கொண்டிருக்கும்
தருணம் யாரும் என்னோடு இல்லாமல்
சென்ற நேரங்கள் எனது இன்பத்திலும் துன்பத்திலும்
நான் மட்டும் இருக்கும் நொடி என்னுடைய
நிலையை புரிய யாரும் இல்லாத வேளை

யாருக்கும் வந்திடக்கூடாத ஒரு கொடிய நிலை
என்னுடன் இந்த தனிமை பிறந்திருந்தாலும்
தனிமையை நான் சந்தோஷமாக தான் ஏற்கிறேன்
அதுவும் ஒரு அறியாத நிமிடங்களாக கழிகின்றது.



பிரதீபன் பிரணவி,
நாயன்மார் கட்டு, நல்லூர்.

# தர்மமே தாழ்திறவாய்



தலைமை என்று
தம்பட்ட மடித்து
பதவி மோகத்தில்
அரசியல் செய்யும்
வெறுமை களை நம்பி
தமிழினம் கண்டதெல்லாம்
வெறும் ஏமாற்றங்களே
மாசற்ற சொந்தங்களை
போருக்குள் இழந்து
எஞ்சிய உறவுகளை
காணாது கலங்கி
சொந்த நிலங்களும்
அநீதிக்குள் அகப்பட்டு
புதை குழிகளும்
புதுக்கணக்காய் சேர்ந்து
அவலங்கள் தொடர்கதையாய்
நீண்டு செல்ல
ஒற்றுமை, ஒன்றினைவு,
புரிந்துணர்வு, பங்காளிகள்
என்று நாளொரு வசனமும்
பொழுதொரு வடிவமுமாய்
பாசாங்கு செய்யும்
இந்த பொய்முகங்களின்
வேசம் கலைத்து
“பொய் ஆயின எல்லாம்
போய் அகல வந்தருளி”
நமச்சிவாயனே.

தேன் நிலா


# கவிதைக் கலசம்


அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான
சங்குநாதத்தில் நீங்களும்
எழுதலாம்...

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர்,
முகவரி, தொலைபேசி இலக்கம்
என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.
ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


# காலக் கேடு




பண்பாடும் பகுத்துணரும்
பகுத்தறிவைத் தொலைத்தவர்கள்
நண்பர்களைத் தேடி என்ன?
கண் பார்க்கும் தொலைவுக்கும்,
அப்பாலும் மனம் பார்க்கும்
ஆனாலும் உணர்விற்குள்
சிறைப்பட்ட தன்மானம்...
தெளிவு பெறத் தடை போடும்

கட்சி அரசியலும்
கருத்தில்லா வாதங்களும்:
பெற்றவர் தம் மத்தியில்தான்:
பேதமைகள் தமை யெல்லாம்
மேதமைகளாய் கொள்ள,
கடை விரித்தோம். இங்கு
விரித்த கடைகளிலே
உருப்படிகள் தேறாத
செருப்புக்கள் தம்மைத்தான்
தெருவோர வர்த்தகர்கள்
கூவி இங்கு விற்கின்றார்.

காரிப் பெரு வணிகன்
கவைக் குத வாதென்று
கூவி அழைப்பதற்கே
நண்பரைத் தேடுகிறான்
ஓ... நண்பர்களே!
நட்புக்கு வரைவு சொன்ன
வள்ளுவன் இன்னு மொருமுறை
தற்கொலை செய்யட்டும்.

வளவை வளவன்

# கைக்கூ கவிதைகள்



அமாவாசை கண்டு
அழுகின்றது
ஏழைக் குடிசை

செம்மறி ஆடு
மரணம்
குளிர்காயும் மனிதம்

கதிரவன் செய்த
முக அலங்காரம்
பௌர்ணமி


மலையின் அழகு
மறைக்கும் முகில்
கண்ணீர் மழை

அழிப்பவனை
அழ வைக்கிறது
வெங்காயம்

தலை குனியும் பணிவு
வளையும் வில்
அடையும் வெற்றி

கவி வேந்தர் - பொன்.சுகந்தன்

# வாழ்வின் தத்துவம்



காலால் மிதித்த
தன்னை கையால்
எடுக்க வைக்கும்
பெருமை கொண்ட
முள்ளை போல
உன்னை தாழ்த்திப்
பேசுபவர்கள்
புகழ்ந்து பேசும் வரை
உன் முயற்சியை
வடிவமைத்துக் கொள்.

வினோத் சர்மினி,
புதிய கற்பகபுரம், வவுனியா.

# நீ... நீ...

உன் வாழ்வில்
வரும்
சிக்கல்களை
கடக்கும்
போது,
சிரித்துக்
கொண்டே
கடக்க
முடிந்தால்...
உலகில்
உன்னை விட
வலிமையானவர்
யாருமில்லை!!



தேனுஜன், புதுக்குடியிருப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெடித்துச் சிதறிய விமானம்...

## பறிபோன உயிர்கள்...

## நெஞ்சை உலக்கிய அஹமதாபாத் கோர விபத்து!

குஜராத்திலிருந்து லண்டனுக்குப் புறப்பட்ட பயணிகள் விமானம், புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விழுந்து நொறுங்கிய காட்சி, இந்தியர்களின் உயிரை உலுக்கியிருக்கிறது!

ஜூன் 12ஆம் திகதி, மதியம் 1:39 மணி அளவில் குஜராத் மாநிலம், அஹகமதாபாத்திலுள்ள சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்திலிருந்து, லண்டனின் கேட்விக் விமான நிலையத்துக்குப் புறப்பட்டது ஏர் இந்தியாவின் **AI 171** விமானம். இரண்டு விமானிகள், 10 விமானப் பணியாளர்கள், 230 பயணிகள் என மொத்தம் 242 பேருடன் டேக்ஆஃப் ஆனது விமானம். அஹமதாபாத்திலிருந்து கிளம்பிய ஓரிரு நிமிடங்களில், “மே டே கால்” எனச் சொல்லப்படும் அவசர அழைப்பை விமானி மேற்கொண்டதாகவும், அதன்பிறகு தங்களுடனான தொடர்பை விமானம் இழந்துவிட்டதாகவும் சொல்லியிருக்கிறது ஏர் டிராஃபிக் கன்ட்ரோல் ரூம்.

தரையிலிருந்து 625 அடி தூரம் உயரே பறந்த விமானம், திடீரென ஆட்டம் கண்டு, கீழ் நோக்கி இறங்கி, வெடித்து விபத்துக்குள்ளாகியிருக்கிறது. அஹமதாபாத் விமான நிலையத்திலிருந்து சில கி.மீ தூரத்திலுள்ள மேகாணிநகர் பகுதியில் விபத்து நிகழ்ந்திருக்கிறது. டேங்க் முழுவதும் எரிபொருள் நிரம்பியிருந்ததால், கீழே விழுந்ததும் வெடித்துத் தீப்பிழம்பு கிளம்பி, அந்தப் பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்திருக்கிறது.

சம்பவ இடத்துக்கு அருகேயிருந்து செல்போனில் எடுக்கப்பட்டிருந்த விபத்துக் காட்சிகளைப் பார்க்கையில், நம் நெஞ்சம் பதறுகிறது. விபத்து நிகழ்ந்த சமயத்தில் மிகப்பெரிய சத்தம் கேட்டது. பூகம்பம் ஏற்பட்டதைப் போல நிலம் அதிர்ந்தது. எங்கும் கரும்புகை சூழ்ந்தது என்கிறார்கள் விபத்தை நேரில் பார்த்தவர்கள்.

விமானத்தில் 169 இந்தியர்களும், 53 பிரிட்டிஷ்காரரர்களும், 7 போர்ச்சுகீசியர்களும், கனடாவைச் சேர்ந்த ஒருவரும் பயணித்திருக்கின்றனர். இவர்களில் இரண்டு கைக்குழந்தைகளும் அடக்கம். 2016 முதல் 2021 வரை குஜராத்தின் முதல்வராக இருந்த பா.ஜ.க தலைவர் விஜய் ரூபாணியும் இந்த விமானத்தில் பயணித்திருக்கிறார். அவர் இறந்ததை, மத்திய அமைச்சர் சி.ஆர்.பாட்டீல் உறுதிப்படுத்தியிருக்கிறார். “பயணிகளில் பெரும்பாலானவர்கள் இறந்திருக்கலாம்” என்றிருக்கிறது குஜராத் காவல்துறை.

இந்த விமான விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். ராஜஸ்தானின் பன்ஸ்வாரா பகுதியைச் சேர்ந்தவர் பிரதிக் ஜோஷி. மனைவி, குழந்தைகளைப் பிரிந்து கடந்த ஆறு ஆண்டுகளாக லண்டனில் மென்பொருள் நிபுணராகப் பணியாற்றி வந்தார்.

இந்த நிலையில், புதிய வாழ்க்கையைத் தொடங்க, குழந்தைகளின் கனவுகளை நிறைவேற்ற, மனைவியின் ஆசையைப் பூர்த்தி செய்ய மூன்று குழந்தைகளையும், மனைவியையும் லண்டன் அழைத்துச் செல்ல முடிவு செய்தார்.

அதற்காக மருத்துவரான அவரின் மனைவி கோமி வியாஸ் தன் பணியை இரண்டு தினங்களுக்கு முன்புதான் இராஜினாமா செய்திருக்கிறார்.

பெரும் கனவுடன் ஏர் இந்தியா விமானத்தில் ஏறி அமர்ந்திருக்கிறது குடும்பம். துரதிஷ்டமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

அதேநேரம், விமானத்தில் **11A** இருக்கையில் அமர்ந்திருந்த விஸ்வாஸ் குமார் ரமேஷ் என்ற 45 வயது நபர், அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்திருக்கிறார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் விஸ்வாஸ், விமானம் டேக் ஆஃப் ஆன 30 விநாடிகளில் பெரும் சத்தம் கேட்டது. அதன் பிறகு விமானம் விழுந்து நொறுங்கியது. நான் கண்விழித்துப் பார்த்த போது, என்னைச் சுற்றிலும் பிணங்கள் கிடந்தன. பயத்தில், உடனடியாக அந்த இடத்திலிருந்து எழுந்து ஓடினேன். நான் 20 ஆண்டுகளாக லண்டனில் வசிக்கிறேன். பிரிட்டன் குடியுரிமை பெற்றிருக்கிறேன். என் சகோதரருடன் இந்த விமானத்தில் ஏறினேன். அவர் வேறு இடத்தில் அமர்ந்திருந்தார். அவருக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை என்று மிகுந்த மனவலியுடன் ஊடகங்களுக்குப் பேட்டியளித்திருக்கிறார்.

> **“பறவை மோதலால் ஏற்பட்ட விபத்தா? தொழில்நுட்பக் கோளாறா? போன்ற கோணங்களில் விபத்து குறித்த விசாரணையைத் தொடங்கியது Aircraft Accident Investigation Bureau. இந்த விபத்தில் சதி ஏதும் இருக்கிறதா? என்ற கோணத்திலும் விசாரணை நடைபெறுகிறது.”**

இதில் பெருஞ்சோகம் என்னவென்றால், விமான விபத்தால் மட்டுமன்றி, விமானப் பாகங்கள் கட்டடங்கள் மீது விழுந்த காரணத்தாலும்உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. விபத்துக்குப் பிறகு, விமானத்தின் பாகங்கள் வெடித்துப் பல திசைகளிலும் சிதறியிருக்கின்றன. அவற்றில் சில பாகங்கள் அங்கிருந்த பிஜே மெடிக்கல் காலேஜ் விடுதியில் விழுந்திருக்கின்றன. இதில், ஏழு மாணவர்கள் உயிரிழந்திருப்பதாகவும், 40 மருத்துவ மாணவர்கள் காயமடைந்திருப்பதாகவும் செய்திகள் வருகின்றன. சில மாணவர்கள் இரண்டாம் தளத்திலிருந்து ஜன்னல் வழியாகக் குதித்து, காயங்களுடன் உயிர் தப்பியிருக்கிறார்கள். காயமடைந்தவர்களுக்கு, அருகிலுள்ள சிவில் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மீட்புப்பணியில் கண்டெடுக்கப்படும் உடல்களும் அங்குதான் கொண்டு வரப்படுகின்றன.

விமானத்தில் பயணித்தவர்களின் உறவுகள், “தங்களது உறவுகளுக்கு என்ன ஆனதோ?” என்ற ஏக்கத்துடன் கதறிக் கண்ணீர் விடும் காட்சிகள் நம்மை உலுக்குகின்றன.

சிவில் மருத்துவமனையின் மருத்துவர்களோ, “இதற்கு முன்பாக இந்த மருத்துவமனையில் இத்தனை உயிரற்ற உடல்களைக் கண்டதில்லை” என்கிறார்கள் வேதனையுடன். உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடுவும் சம்பவ இடத்தில் ஆய்வு மேற்கொண்டனர். விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு கோடி ரூபாயை நிவாரணமாக அறிவித்திருக்கிறது டாடா குழுமம்.

பறவை மோதலால்ஏற்பட்ட விபத்தா? தொழில்நுட்பக் கோளாறா? போன்ற கோணங்களில் விபத்துக் குறித்த விசாரணையைத் தொடங்கியது Aircraft Accident Investigation Bureau.


இந்த விபத்தில் சதி ஏதும் இருக்கிறதா? என்ற கோணத்திலும் விசாரணை நடைபெறுகிறது.

இந்த இதழ் அச்சுக்குச் செல்லும் வரை அதிகாரபூர்வ உயிரிழப்பு எண்ணிக்கைகள் வெளியாகவில்லை. இந்தக் கோர விபத்தில் நொறுங்கியது விமானம் மட்டுமல்ல. ஒட்டுமொத்த உலகத்தவர்களின் இதயங்களும் தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: உலகம் சுற்றிய வாலிபன்
இசை: எம்.எஸ்.வி
பாடியவர்: டி.எம்.எஸ் ரூ பி.சுசீலா
வரிகள்: வாலி



பச்சைக்கிளி முத்துச்சரம்
முல்லைக்கொடி யாரோ
பாவை என்னும் பேரில் வரும்
தேவன் மகள் நீயோ ?
பொன்னின் நிறம் பிள்ளை மனம்
வள்ளல் குணம் யாரோ
மன்னன் என்னும் பேரில் வரும்
தேவன் மகன் நீயோ?

பொன்னின் நிறம் பிள்ளை மனம்
வள்ளல் குணம் யாரோ
மன்னன் என்னும் பேரில் வரும்
தேவன் மகன் நீயோ?

தத்தை போலத் தாவும் பாவை
பாதம் நோகும் என்று
மெத்தை போல பூவைத் தூவும்
வாடைக் காற்றும் உண்டு
வண்ணச்சோலை வானம் பூமி
யாவும் இன்பம் இங்கு
இந்தக் கோலம் நாளும் காண
நானும் நீயும் பங்கு
கண்ணில் ஆடும் மாங்கனி கையில் ஆடுமோ
நானே தரும் நாளும் வரும் ஏனிந்த அவசரமோ

பச்சைக்கிளி முத்துச்சரம்
முல்லைக்கொடி யாரோ
பாவை என்னும் பேரில் வரும்
தேவன் மகள் நீயோ ?

பொன்பட்டாடை மூடிச்செல்லும் தேன்சிட்டோடு மெல்ல
நான் தொட்டாடும் வேளைதோறும் போதை என்ன
சொல்லகை தொட்டாட காலம் நேரம் போகப் போக
உண்டு
கண்பட்டாடும் காதல் வேகம் பாதிப்பாதி இன்று
பள்ளிக் கூடம் போகலாம் பக்கம் ஓடி வா
கூடம்தனில் பாடம் பெறும் காலங்கள் சுவையல்லவா

பச்சைக்கிளி முத்துச்சரம்
முல்லைக்கொடி யாரோ
பாவை என்னும் பேரில் வரும்
தேவன் மகள் நீயோ ?

# இது என்னடா சிங்கத்துக்கு வந்த சோதனை

ஆபிரிக்க காடுகளுக்குள்ள "லயன் சஃபாரி" போகிறவர்கள். "முழுசாக மூடப்படாத ஜீப்களில் செல்கிற ரீல்ஸ் அடிக்கடி கண்களில் பட்டுக்கொண்டே இருக்கிறது. சில ரீல்ஸ்ல, ரிசார்ட் வெளியே புல்வெளியில் சில டூரிஸ்கள் டீ குடிச்சுத்துக்கொண்டு உட்கார்ந்திருக்க, சிங்கங்கள் அவர்களை கண்டுகொள்ளாமல் கடந்து போகிறது. இது என்னடா சிங்கங்களுக்கு வந்த சோதனை? அடிக்கடி தங்களைப் பார்க்க வரும் மனிதர்களைப் பார்த்து பார்த்து சிங்கங்கள் "நார்மலைஸ்" ஆயிடுச்சா? சிங்கங்களுடைய இந்த அமைதிக்குப் பின்னால் வேறு ஏதாவது காரணங்கள் இருக்கா? தங்களை வேடிக்கைப் பார்க்க வரும் மனிதர்களிடம் சிங்கங்கள் எப்பவும் அமைதியாக தான் நடந்துக்குமா? இவற்றைப் பற்றி எல்லாம் வன ஆர்வலர்களும், ஆராய்ச்சியாளர்களும் என்ன சொல்கின்றார்கள் என்று தேடினோம்.

### சிங்கங்களின் பார்வையில் சஃபாரி வாகனங்கள்!

சிங்கங்கள் சஃபாரி வாகனங்களைப் பார்க்கிறபோது, அவற்றின் வடிவம் அவற்றின் நரம்பு மண்டலத்துக்கு கடத்தப்படும். அப்படிக் கடத்தப்படும்போது, பூனைக்குடும்பத்தைச் சேர்ந்த விலங்குகளின் மூளையில் உள்ள நரம்பு செல்கள், சஃபாரி வாகனங்களின் அளவு, அது இருக்குமிடம், அது எப்படி நகர்கிறது என்பதை மிகத் துல்லியமாக கணிக்கும். அதனால், சிங்கங்களைப் பொறுத்தவரை, சஃபாரி வாகனங்களில் பல மனிதர்கள் இருக்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ளாது. அந்த சஃபாரி வாகனத்தையே தன்னைவிட பெரிய சைஸில் இருக்கும் ஓர் உருவமாகவே எடுத்துக்கொள்ளும். தன்னைவிட பெரிய உருவத்துடன் மோத எந்த விலங்குகளும் விரும்புவதில்லை, சிங்கம் உட்பட.

### அச்சப்படுகின்றனவா காட்டு ராஜாக்கள்

அடிக்கடி தங்கள் மத்தியில் சஃபாரி வாகனங்கள் வந்து செல்வதால், இவற்றால் நமக்கு எந்தப் பிரச்னையும் இல்லை என்பதை சிங்கங்கள் உணர்ந்துகொண்டதாலும்கூட அவை அந்த வாகனங்களைத் தாக்காமல் இருக்கலாம். சஃபாரி செல்பவர்கள் சிங்கங்களின் அமைதியைக் குலைக்கும்படி சத்தம் எழுப்பாத வரைக்கும், ஒரு சிங்கக் குடும்பத்தின் ஒற்றுமையைக் குலைக்கும்படி எதையும் செய்யாமல் இருக்கும் வரைக்கும், சிங்கங்கள் சஃபாரி வாகனங்களை எதுவும் செய்யாது. சஃபாரி வாகனங்கள் ஒரே பாதையில் அமைதியாக, ஒரே சீராக செல்லும் வரைக்கும் சிங்கங்கள் அவற்றை கண்டு கொள்ளாது என்கிறார் சிங்கங்கள் குறித்த ஆராய்ச்சியாளரும் வனவிலங்கு நிபுணருமான டாக்டர் கிரெய்க் பேக்கர்.

### மனிதர்களுடன் மோதலை விரும்பவில்லையா சிங்கங்கள்?

சிங்கங்களால் நமக்கு உயிர் ஆபத்து நேரலாம் என்று மனிதர்களுக்கு எப்படித் தெரியுமோ, அதேபோல சிங்கம் போன்ற வலுவான வேட்டையாடிகளுக்கும் அவற்றின் "பரிணாம உள்ளுணர்வு" எவற்றுடன் மோதலாம் எவற்றுடன் மோதக்கூடாது என்பதை தெரியப்படுத்தும். ஜர்னல் ஆஃப் அனிமல் ஈக்காலஜியில் வந்த ஓர் ஆய்வு, "சிங்கம் போன்ற பெரிய மாமிச உண்ணிகள், பல நூறு ஆண்டுகளாக தாங்கள் உயிர்வாழ வேண்டுமென்றால் மனிதர்களைத் தவிர்க்க வேண்டும் என்கிற உத்தியை தெரிந்து வைத்திருக்கின்றன" என்கிறது. அதாவது, சிங்கம் போன்ற பெரிய வேட்டையாடி விலங்குகள்கூட மனிதர்களை ஆபத்தானவர்கள் லிஸ்ட்டில்தான் வைத்திருக்கின்றன என்பதுதான் இதன் அர்த்தம். அதனால்தான், மனிதர்கள் வாகனங்களில் அருகில் இருக்கும்போதுகூட, சிங்கங்கள் அவர்களைவிட்டு பெரும்பாலும் ஒதுங்கியே செல்கின்றன.

### அரிதாக தாக்கும்!

சிங்கங்களை அச்சுறுத்தினால், கால்களைத்தூக்கி கர்ஜனை செய்து நம்மை எச்சரிக்கும். அதை அலட்சியப்படுத்தும்போது சிங்கங்கள் தாக்கக்கூடும். 2022 இல் உலகம் முழுக்க எடுத்த தரவுகளின்படி, கிட்டத்தட்ட ஒரு கோடி பேரின் மரணத்துக்கு கொசுக்கள் காரணமாக இருந்திருக்கின்றன. இரண்டாவது இடத்தில் பாம்பும், மூன்றாவது இடத்தில் நாயும் இருக்கின்றன. ஆனால், மனிதர்களைக் கொல்கின்ற விலங்குகளில் சிங்கங்கள் 12 ஆவது இடத்தில்தான் இருக்கின்றன. 10 ஆவது மற்றும் 11 ஆவது இடங்களில் நீர் யானையும், யானையும் இருக்கின்றன. கடந்த மாதம் நமீபியாவை சேர்ந்த 59 வயது தொழிலதிபரான பெர்ன்ட் கெபல் என்பவரை சிங்கம் தாக்கிக் கொன்றது நினைவிருக்கலாம். இவர் தன்னுடைய காரின் மேல் சிறிய கூடாரம் அமைத்து தங்கியிருந்ததாகவும், இரவில் இயற்கை உபாதையைக் கழிக்க கூடாரத்தில் இருந்து கீழே இறங்கிய போதுதான் ஒரு சிங்கத்தால் தாக்கப்பட்டு இறந்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கைப்பிடி அரிசி! விவேகானந்தர் கூறிய பாடம்!



ஒரு கைப்பிடி அரிசி! விவேகானந்தர் கூறிய பாடம்! பாவ காரியங்களை மறைக்க முடியுமா? அவ்வளவு ஏன், யாருக்கும் தெரியாமல் ஒரு சிறு தவறையாவது நம்மால் செய்ய முடியுமா?

இந்தக் கேள்விக்கான பதிலைத் தருகிறது பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு ஒரு பழக்கம் உண்டு. திடீரென்று தன் சீடர்களை அழைப்பார். ஏதாவது ஒரு சோதனை வைப்பார். அதன் முடிவில், அவருடைய சீடர்களுக்கு மிகப்பெரிய பாடம் கிடைக்கும். அது போதனையிலோ, வார்த்தைகளால் கற்பிப்பதிலோ கிடைக்காத அற்புதமான பாடமாக இருக்கும்.

ஒருநாள் தம் சீடர்களை அழைத்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு கைப்பிடி அரிசியைத் திருடிக்கொண்டு வரவேண்டும். சீடர்கள் அதிர்ந்து போய் அவரைப் பார்த்தார்கள்.

வெளியிடங்களில் அல்ல. உங்கள் சொந்த வீட்டிலிருந்து ஒரு கைப்பிடி அரிசியைத் திருடிக்கொண்டு வரவேண்டும். ஆனால், ஒரு நிபந்தனை. நீங்கள் திருடுவது உங்கள் வீட்டிலிருக்கும் யாருக்கும் தெரியக்கூடாது. இன்னும் ஒரு வாரம்தான் அவகாசம். அதற்குள் இதை நீங்கள் செய்துவிட வேண்டும். சரியா?

சீடர்களால் அவர் வார்த்தையை மறுத்துப் பேசமுடியவில்லை. தலையசைத்தபடி பகவானிடமிருந்து விடைபெற்றார்கள். ஒரு வாரம் கழிந்தது. சீடர்கள் மடத்துக்குத் திரும்பினார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னபடியே எல்லோரும் ஒரு கைப்பிடி அரிசியைத் தங்கள் வீட்டிலிருந்து திருடிக்கொண்டு வந்திருந்தார்கள், ஒரு சீடரைத் தவிர. அந்தச் சீடரிடம் நீ ஏன் உன் வீட்டிலிருந்து அரிசியைத் திருடிக்கொண்டு வரவில்லை? என்று கேட்டார். என்னால் என் வீட்டில் திருட முடியவில்லை.

அதுதான் ஏன்...? உன் வீட்டில் இருப்பவர்கள் இல்லாத சந்தர்ப்பம் வாய்க்கவே இல்லையா? அப்படி இல்லை சுவாமி. எந்தத் தவறு செய்தாலும் ஒரே ஒருவரிடமிருந்து அதை மறைக்கவே முடியாது. அந்த நபர் நாம்தான். நான் திருடுவது என் வீட்டாருக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால், எனக்குத் தெரியுமே! என் ஆன்மாவிடமிருந்து அந்தத் தவறை என்னால் ஒருபோதும் மறைக்க முடியாதே? ஸ்ரீராமகிருஷ்ணர் புன்முறுவலுடன் அந்தச் சீடரைப் பார்த்தார். அந்தச் சீடர் வேறு யாருமல்ல. சுவாமி விவேகானந்தர்.



# ஆச்சி அறிவுரை



## உணவை வீணடிப்பவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும்

### பேராண்டி...

மாவை.நா.கஜேந்திரன்

உணவின்ர முக்கியத்துவம் தெரியாமல் அதை அநியாயமா கொட்டுற ஆக்களைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

விவசாயிகள் உணவுப் பொருட்களை விளைய வைக்கிறத்துக்கு படுகிற பாடு தெரிஞ்சவை ஒருநாளும் உணவுகளை அநியாயப்படுத்த மாட்டினம்.

உணவுப் பொருட்களை கொட்டுறவையளுக்கு தண்டனை கொடுக்கிற மாதிரி ஒரு சட்டம் கொண்டு வந்தால்க்கூட ஆரும் எதிர்க்க மாட்டினம். பயத்திலையாவது உணவுகளைக் கவனமாக் கையாளப் பழகுவினம்.

உலகளவில் நாள் ஒன்றிற்கு 105 கோடி தொன் உணவுகள் கொட்டப்படுது எண்டு ஐ.நா அறிக்கையில் சொல்லியிருக்குது.

பேராண்டி, எண்டைக்கு வீடுகளிலை விசேஷம் செய்யிறதை விட்டுட்டு மண்டபங்களைத் தேர்வு செய்யத் தொடங்கினமோ, அண்டைக்குத் தொட்ட சனியன். இண்டைவரைக்கும் தீர்ந்தபாடில்லை.

வீடுகளிலை தேவை நடந்தால், ஆட்களைப் பார்த்து அரிசி போடுவினம். அதாவது, இருபது கிலோ அரிசியை போட்டால், அது முடியுற நிலையிலும் ஆக்களின்ர வரவையும் பார்த்துத் திரும்பவும் கிடாரத்தை வைச்சிடுவினம்.

அதனால சோறு ஒருநாளும் மிஞ்சாது, ஆனால் மண்டபங்ளிலை அப்படியோ, கலியாண வீடு, சாமத்திய வீடெண்டால் எத்தின பேருக்கு சொன்னீங்கள் எண்டு கேட்டுட்டு அதுன்ர மூண்டு மடங்கு சமையல் செய்யிறது, தேவைக்கு ஆக்கள் வராட்டி மிஞ்சின சாப்பாட்டை குழி தோண்டிப் புதைக்கிறது. இதைவிட கொடூரம் ஏதும் இருக்கோ?

மனட்சாட்சி உள்ள எவரும் இப்பிடிச் செய்வினமோ? எத்தினை குடும்பங்கள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் கஷ்டப்படுதுகள். ஆனால் நாங்கள் கொண்டாட்டங்கள் எண்டுற பேரிலை இப்பிடி உணவுகளை வீணடிக்கிறம்.

அண்மையிலை வல்வை வீதி, விளான் றோட்டிலை இருமருங்கும் குவியல் குவியலாச் சோறு கொட்டிக் கிடந்தது. அதிலை இருந்தவரிட்டை விசாரிச்சா? "பக்கத்திலை கலியாண வீடு ஒண்டு. அங்கை சாப்பாடு மிஞ்சிப் போட்டுது. அதுதான் நாய், பூனை சாப்பிடுமெண்டு வைச்சிருக்கினம்" எண்டார். எனக்கு கெட்டகோவம் வந்துது. இப்பிடி றோட்டோரமா சாப்பாட்டை வைச்சால் அதை நாய், பூனை சாப்பிடுங்கள் எண்ட சிந்தனை எவ்வளவு கேவலமான சிந்தனை தெரியுமோ! வீதியிலை நாய்கள் நிண்டால் எவ்வளவு விபத்து நடக்கும் எண்டுறது வைச்சவைக்குத் தெரியாதோ? அதைவிட இந்த பழுதாப் போன சோத்தை ஆடு, மாடுகள் திண்டு தெண்டால் அதுகள் செத்தெல்லோ போயிடும்.

அதிகளவான சோறு திண்ட எத்தினை மாடாடு செத்திருக்குது பேராண்டி. அதைவிட எந்த விஷயத்துக்கும் முறையெண்டு ஒண்டு இருக்கெல்லோ? இதுகளை யோசிக்காமல் செயற்படுறவையை கைது செய்து நடவடிக்கை எடுக்கவேணும். குறிப்பா தேவை நடத்துற வீட்டுக்காரரை, திருமண மண்டபங்களை விசேடமா கவனிக்க ஆள் நியமிக்க வேணும். அவை உணவை வீணடிச்சால், அவைக்கெதிரா நடவடிக்கை எடுக்கவேணும். அப்பிடிச் செய்தால் திருத்தம் வரும். எங்கட நாட்டிலை பஞ்சமும் இருக்காது.

**ஆச்சி வருவா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான வாழ்வுக்கு



### காலை உணவு

காலை உணவைத் தவிர்ப்பது, பித்தப்பையில் கற்கள் உருவாவது முதல் சர்க்கரை நோய் வரை, பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும். காலை நேரத்தில் கட்டாயம் ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ள வேண்டும்.



### தண்ணீர்

தினமும் இரண்டரை லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும். சூப், ரசம், ஜூஸ், மோர், இளநீர் வாயிலாகவும் திரவ உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.



### தூக்கம்

தூக்கம் மிகவும் முக்கியமானது. இரவில் 10.30 மணிக்கு உறங்கி, காலை சூரியன் உதிக்கும் முன்னர் எழுவது உடலுக்கும் உள்ளத்துக்கும் நல்லது. தினமும், ஏழு முதல் ஒன்பது மணிநேர தடையற்ற உறக்கம் அவசியம்.



### உடல் உழைப்பு

தினமும் நடைப்பயிற்சி, உடற்பயிற்சி, யோகா என ஏதாவது ஒரு பயிற்சியைச் செய்யுங்கள். தினமும், 50 மாடிப்படி ஏறி இறங்கினால்கூட இதயநோய்கள் வருவதற்கான வாய்ப்பை இரண்டு சதவிகிதம் வரை குறைக்க முடியும்.



### தியானம்

படிப்பு, வேலை, குடும்பச் சண்டை என எந்தவொரு பிரச்சினைக்காகவும் மனதில் புழுங்குவது பிரச்சினைகளைத் தீர்க்கவும் உதவாது உடலுக்கும் கேடு, தியானம் செய்வது மன அழுத்தத்தைப் போக்கும்.



### மது, புகையைத் தவிர்க்கவும்

புகையும் மதுவும் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை, உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்பையும் பாதிக்கக்கூடியவை. புகை, மதுவைத் தவிர்ப்பவர்களுக்கு, புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் பெருமளவு குறையும்.

# அடுக்களைப் பக்கம்...



1. வெந்தயத்தை ஊறவைத்துச் சாப்பிடுவதால், வயிற்றுப் புண்கள் குறையும். ஒரு டீஸ்பூன் வெந்தயத்தை நீர்விட்டுக் கொதிக்க வைத்து, வடிகட்டி வாய் கொப்பளித்தால் தொண்டைக்கட்டுச் சரியாகும்.
2. கசகசாவை நீரில் ஊறவைத்து அரைத்துப் பாலில் கலந்து பருகினால், அற்புதமான உறக்கம் வரும். கசகசாவை லேசாக வதக்கி, தேனில் குழைத்துச் சாப்பிட்டால், செரிமானக் கோளாறால் ஏற்பட்ட வயிற்று வலி குணமாகும்.
3. தினமும் இரவில் குக்கரின் கேஸ்கட், வெயிட் முதலியவற்றை நன்கு சுத்தம் செய்வதுடன், குக்கர் மூடியிலுள்ள சே∴ப்டி வால்வையும் சரிபார்ப்பது நல்லது. இப்படி செய்து வைத்தால், காலை அவசரத்தில் பிரச்சினைகள் வராமல் சமைக்கலாம்.
4. கேஸ் அடுப்பு ஒருபக்கம் எரிந்து கொண்டு இருக்கும்போதே, மற்ற பாகங்களைத் துடைத்து சுத்தம் செய்யக் கூடாது. ஸ்டவ் எரியாமல் இருக்கும்போது, கேஸ் சிலிண்டரையும் மூடிய பின்னரே சுத்தம் செய்ய வேண்டும்.
5. சமையலறையில் இரண்டு கிடுக்கிகளை நல்ல நிலையில் எப்போதும் வைத்திருங்கள். அடுப்பிலிருந்து பாத்திரம் இறக்க இவை பயன்படும். இதற்குப் பதில் புடவைத் தலைப்பு, துண்டு, காகிதம் போன்றவற்றை சூடான பாத்திரங்களை இறக்கப் பயன்படுத்தாதீர்கள்.
6. அடுப்பின் ஒரு பரனில் சூடான எண்ணெய் உள்ள பாத்திரம் இருந்தால், பக்கத்தில் உள்ள பாத்திரத்திலிருந்து நீர்த்திவலைகள் அதில் சொட்டி விடாமல் பார்த்துக் கொள்ளவும். இல்லாவிட்டால் சடசடவென எண்ணெய் வெடித்து உங்கள் மீது தெறிக்கும்.



# சேமியா பிரியாணி

## சமைப்போம் சுவைப்போம்



### தேவையானவை :

சேமியா – 2 கப்
கேரட் – ஒன்று
பிரெட் ஸ்லைஸ் – 2
வெங்காயம் – ஒன்று
தக்காளி – ஒன்று
கிராம்பு – 3
தண்ணீர் – 4 கப்
பச்சைப் பட்டாணி – அரை கப்
எண்ணெய் – 2 டீஸ்பூன்
இஞ்சி – பூண்டு விழுது – ஒரு டீஸ்பூன்
புதினா இலைகள் – 6
ஏலக்காய் – 2
கரம் மசாலாத்தூள் – ஒரு டீஸ்பூன்
மிளகாய்த்தூள் – அரை டீஸ்பூன்
பட்டை – அரை அங்குலத்துண்டு
உப்பு – தேவைக்கேற்ப



### செய்முறை

ஒரு கடாயைச் சூடாக்கி, சேமியா சேர்த்து 2-3 நிமிடங்கள் நடுத்தர தீயில் வறுக்கவும். மற்றொரு கடாயில் தண்ணீரைக் கொதிக்க வைக்கவும். அதில் ஒரு டீஸ்பூன் எண்ணெய் சேர்த்து வறுத்த சேமியாவைச் சேர்க்கவும். இரண்டு நிமிடங்கள் ஊற வைக்கவும்.

சேமியாவைத் தண்ணீரிலிருந்து வடிகட்டி வைக்கவும். ஒரு கடாயில் எண்ணெயைச் சூடாக்கி, பட்டை, கிராம்பு மற்றும் ஏலக்காய் சேர்த்து ஒரு நிமிடம் வதக்கவும். நறுக்கிய வெங்காயத்தைச் சேர்த்து வதக்கவும். இப்போது இஞ்சி - பூண்டு விழுது சேர்த்துப் பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். பின்னர் நறுக்கிய தக்காளியைச் சேர்த்து, அது மென்மையாக மாறும் வரை வேகவிடவும். பிறகு புதினா இலைகளைச் சேர்த்து ஒரு நிமிடம் வதக்கவும். அதில் நறுக்கிய கேரட் மற்றும் பச்சைப் பட்டாணி சேர்த்து ஒரு நிமிடம் வதக்கவும். தேவையான நீர், உப்பு, கரம் மசாலாத்தூள், பிரெட் ஸ்லைஸ் மற்றும் மிளகாய்த்தூள் சேர்க்கவும். நன்கு கலந்து, காய்கறிகள் வேகும் வரை மூடி வேகவிடவும். சேமியாவைச் சேர்த்து மெதுவாகக் கலக்கி 2-3 நிமிடங்கள் வேகவிடவும். சேமியா பிரியாணி தயார். சட்னியுடன் சூடாகப் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எதிரி நண்பனாகலாம் நண்பன் எதிரியாகக் கூடாது!

சிலபல மாதங்களுக்கு முன்பு, கட்டித்தழுவி நட்பு பாராட்டிய டொனால்ட் ட்ரம்பும், எலான் மஸ்க்கும் தற்போது எதிரிகளாக மாறி, எதிரெதிர் திசையில் நின்று மோதிக்கொண்டிருக்கின்றனர்!

**நண்பன் ஒருவன் வந்த பிறகு...**

டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களின் தலைவர் எலான் மஸ்க், கடந்த ஆண்டு இறுதியில் நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், ட்ரம்புக்கு முழு ஆதரவு வழங்கியதோடு, அவருக்காகப் பிரசாரங்களையும் மேற்கொண்டார். சுமார் 290 மில்லியன் அமெரிக்க டொலரை ட்ரம்பின் வெற்றிக்காக மஸ்க் செலவிட்டதாகச் சொல்லப்பட்டது.

தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியான ட்ரம்ப், தனது நிர்வாகத்தில் மஸ்க்குக்கு அதீத முக்கியத்துவம் கொடுத்தார். அமெரிக்க அரசின் செலவுகளைக் குறைப்பதற்காக, "டாட்ஜ்" என்ற பெயரில் அரசு செயற்திறன்துறை ஒன்றைப் புதிதாக உருவாக்கி, மஸ்க்கை அந்தத் துறையின் தலைவராக்கினார் ட்ரம்ப். மஸ்க்கின் அறிவுரைப்படி ஏராளமான அரசுப் பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பியது ட்ரம்ப் நிர்வாகம். இருவரும் இணைபிரியாத நண்பர்களாக, அரசு நிகழ்ச்சி மேடைகளில் ஒன்றாகவே வலம் வந்தனர்.

**நட்புக்குள்ளே ஒரு பிரிவிங்கு வந்தது...**

டாட்ஜ் துறையின் தலைவராக இருந்த எலான் மஸ்க், சமீபத்தில்தான் அந்தப் பணியிலிருந்து விலகினார். அவரது டெஸ்லா நிறுவனத்தின் வளர்ச்சி சரிந்து விட்டதைச் சரிசெய்யவே மஸ்க் பதவி விலகியதாக முதலில் சொல்லப்பட்டது. பின்னர், டரம்பின் சில முடிவுகளை அவர் விரும்பாததுதான், பதவி விலகியதற்குக் காரணம் என்றும் சொல்லப்பட்டது.

டாட்ஜ் பொறுப்பிலிருந்து விலகுவதற்கு முன்பாகவே, ட்ரம்ப் கொண்டுவரவிருந்த "பிக் பியூட்டிஃபுல்" பட்ஜெட் மசோதாவை விமர்சித்திருந்தார் மஸ்க். இருந்தும், டாட்ஜ் துறையை வழிநடத்த எனக்கு வாய்ப்பளித்த ஜனாதிபதி ட்ரம்புக்கு நன்றி என்று சொல்லி, நல்ல முறையிலேயே பதவி விலகியிருந்தார் மஸ்க். இதையடுத்து, ட்ரம்ப் பல இடங்களில் "பிக் பியூட்டிஃபுல்" மசோதாவைப் புகழ்ந்து பேச, மஸ்க் அந்த மசோதாவைக் கிழித்துத் தொங்கவிட்டார். இதனால், இருவருக்கும் இடையேயான நட்பில் விரிசல் ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்தன.

**"பிக் பியூட்டிஃபுல்" மசோதாவால் மோதல்?**

"பிக் பியூட்டிஃபுல்" மசோதா மூலம், வரிச் சலுகைகள் வழங்கி, அமெரிக்கக் குடும்பங்களின் வருவாயைப் பெருக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதே போல, இராணுவச் செலவீனங்களை அதிகரிக்கவும் இந்த மசோதா உதவுகிறது. டாட்ஜ் துறையின்கீழ் மஸ்க் கொடுத்த பரிந்துரைகளை ஏற்காமல், ட்ரம்ப் இந்த மசோதாவை வடிவமைக்கச் செய்திருந்தார்.

அமெரிக்காவின் கடனை அதிகரிக்கப்போகும் இந்த மசோதா அருவருக்கத்தக்கது. இந்த மசோதாவை ஆதரிப்பவர்கள் வெட்கப்பட வேண்டும் என்று கடுமையாக விமர்சித்திருந்தார் மஸ்க்.

இதனால் ஆத்திரமடைந்த ட்ரம்ப், நமது பட்ஜெட்டில் பில்லியன் கணக்கில் பணத்தை மிச்சப்படுத்துவதற்கான எளிய வழி, மஸ்க்குக்கான அரசாங்க மானியங்களையும், ஒப்பந்தங்களையும் நிறுத்துவதுதான் என்று எச்சரிக்கை விடுத்தார். மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், அரசாங்கத்துடன் பல்வேறு ஒப்பந்தங்களைப் போட்டிருப்பதன் மூலம் நல்ல பலனடைந்திருக்கிறது. அதை இரத்து செய்யும் வகையிலேயே மஸ்க்கைச் சீண்டியிருக்கிறார் ட்ரம்ப்.

அதோடு, மின்சாரக் கார்களுக்கான மானியங்களை நிறுத்த அரசு திட்டமிட்டிருப்பதால், மஸ்க்கின் டெஸ்லா நிறுவனத்துக்குப் பின்னடைவு ஏற்படும். எனவேதான், எனக்கு எதிராகத் திரும்பியிருக்கிறார். இதனால், எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், அவர் அரசுப் பதவியை முன்கூட்டியே இராஜினாமா செய்திருக்க வேண்டும் என்றிருக்கிறார் ட்ரம்ப்.

**ட்ரம்ப் பதவி விலக வேண்டும்!**

இதையடுத்து, தொடர்ச்சியாக ட்ரம்புக்கு எதிராக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுக் கொண்டிருந்தார் மஸ்க். அந்தப் பதிவுகளில், கார் மானியங்கள் பற்றி எனக்குக் கவலையில்லை. நாட்டின் கடனைக் குறைக்கவே நான் விரும்பினேன். நான் இல்லையென்றால், கடந்த தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்றிருக்கவே முடியாது. நன்றியுணர்வே இல்லாதவர் அவர். ட்ரம்பின் வரி விதிப்பு முறைகளால், அமெரிக்காவில் பொருளாதார மந்த நிலை ஏற்படும் என்று காட்டமாக விமர்சித்தவர், எப்ஸ்டீன் ஃபைல்ஸில் ட்ரம்பின் பெயர் இடம்பெற்றிருக்கிறது. அதனால்தான், அது தொடர்பான ஆவணங்களை வெளியிடவில்லை" என்று குண்டைத் தூக்கிப் போட்டார்.

மேலும், ட்ரம்ப், பதவி விலக வேண்டும். அவருக்கு பதிலாக ஜே.டி.வான்ஸ் அமெரிக்க ஜனாதிபதியாக வேண்டும் என்ற எக்ஸ் பயனரின் கருத்தை ஆமோதித்திருந்தார் மஸ்க். இவரது அடுத்தடுத்த பதிவுகளால் சூடான ட்ரம்ப், மஸ்க், பைத்தியம் போல நடந்து கொள்கிறார் என்று கொந்தளித்தார்.

**புதுக்கட்சி தொடங்கும் மஸ்க்?**

இதற்கிடையில், அமெரிக்காவிலுள்ள 80% நடுத்தட்டு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு புதிய அரசியல் கட்சியை உருவாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதா? என்று எக்ஸ் தளத்தில் மஸ்க் நடத்திய கருத்துக்கணிப்பில், ஆம் என்ற பதிலோடு 80% பேர் ஆதரவளித்திருக்கின்றனர். இதையடுத்து, அமெரிக்காவுக்கு நிச்சயம் ஒரு புதிய அரசியல் கட்சி தேவைப்படுகிறது என்று சொன்ன மஸ்க், "தி அமெரிக்கன் பார்ட்டி" என்று கட்சிப் பெயரையும் அறிவித்திருக்கிறார். புதுக்கட்சி தொடங்குவதற்கான வேலையையும் அவர் ஆரம்பித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

அமெரிக்க விண்வெளி வீரர்களையும், சர்வதேச விண்வெளி மையத்துக்குத் தேவையான பொருட்களையும் விண்வெளிக்கு எடுத்துச் செல்ல ஸ்பேஸ் எக்ஸின் டிராகன் விண்கலங்களையே நம்பியிருக்கிறது அமெரிக்கா. எனவே இந்த மோதல் நீடித்தால், இருதரப்புக்குமே பின்னடைவுதான் என்பதால், விரைவில் இருவருக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறலாம் என்கிறார்கள் அமெரிக்க அரசியல் பார்வையாளர்கள்.

அமெரிக்கா ஃபர்ஸ்ட், அதாவது அமெரிக்காவின் வளர்ச்சியே முதன்மையானது என்ற கொள்கையோடு ஓரணியில் இணைந்து ட்ரம்பும் மஸ்க்கும் தேர்தலை எதிர்கொண்டனர்.

ஆனால் இன்று, "ஈகோ ஃபர்ஸ்ட்" என இருவரும் சுயநல நோக்கோடு பொதுவெளியில் மோதிக்கொண்டிருக்கின்றனர். ஈகோவா... அமெரிக்காவா... இவர்கள் இருவருக்கும் எது முதன்மையானது? என்பதை இந்த மோதலை வைத்து மக்கள் உணர்ந்திருப்பார்கள்!

# தெளிவே என் சிந்தனையுள்... 14

அடர்ந்த காட்டில் ஒரு மரத்தில் பறவைகள் இருப்பதைக் கண்டான் வேடன். உடனே தனது அம்பில் விஷம் தடவி ஒரு பறவையை இலக்கு வைத்து எய்தான்.

அம்பு பறவையில் படவில்லை. அந்த மரக் கிளையில் ஆழமாய் பதிந்தது. சிறிது காலத்தில் அந்த மரம் பட்டுவிட்டது.

அதில் இருந்த பறவைகள் அனைத்தும் பறந்து விட்டன. ஆனாலும் அந்த மரத்தில் ஒரேயொரு கிளி வாழ்ந்து வருவதை அவதானித்த வேடன் "இந்தப் பட்ட மரத்தில் ஏன் இருக்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு அந்தக் கிளி கூறியது, வேடனே! நான் பிறந்து வளர்ந்தது இந்த மரத்தில்தான். இந்த மரக்கிளையில் இருந்தே தாவித் தாவிப் பறக்கப் பழகினேன்.

இந்த மரத்தின் பழங்களையே உண்டு பசியாற்றினேன். "எனக்கு வாழ்வளித்த இந்த மரம் பட்டுவிட்டது என்பதற்காக இதைவிட்டு எப்படிப் போவேன்?" என்றது. வேடன் தான் செய்த செயலை எண்ணி வெட்கித் தலைகுனிந்தான்.

அன்பானவர்களே! எமது நாட்டின் நிலையும் இதுதான். இது நாம் பிறந்து வாழ்ந்த எங்கள் பூர்வீக பூமி.

எமது பூமியை அழிக்கவல்ல அம்புகளை ஏவி, எமது பூர்வீகங்களை கபளீகரம் செய்யும் செயல் தாராளமாக நடந்து கொண்டிருக்கிறது.

அன்பைப் பிரதான கொள்கையாக கொண்டவர்களே இந்தக் கொடுமையைச் செய்வதுதான் வேதனையான விடயம்.

தொடக்கம் உண்டேல் முடிவு நிச்சயம். தொடக்கம் என்பது அக்கிரமங்கள் நிறைந்தவர்களிடம் இருந்தாலும் முடிவு அன்பானவர்களிடமே நிறைந்திடும். அந்த அன்பான முடிவுக்காய் அமைதியாய், பொறுமையாய் காத்திருப்போம். காத்திருப்பு மிகச் சிறந்தது.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ். கோட்டை

**59**

**செங்கை ஆழியான்**

கோட்டை இராணுவ முகாமை விடுதலை புலிகள் தமது முற்றுகைக் குள்கொண்டு வந்தனர் . ஸ்ரீலங்கா அரசுக்கும் விடு தலைப் புலிகளுக்கும் இடையிலான அரசியற் தீர்வு ஒன்றிற்கான பேச்சு வார்த்தைகள் முறி வடைந்தன. இரு பகுதியி னரும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பல் வேறு பகுதிகளிலும் மோதி கொண்டனர்.

விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கு மாகா ணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களைத் தாக்கி கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். கிழக்கு மாகாணப் பொலிஸ் நிலை யங்கள் கைப்பற்றப்பட்டு அவற்றிலிருந்த ஆயுதங்கள் புலிகளினால் பறிக்கப்பட்டன. வவுனியா, ஒட்டுசுட்டான் மன்னார் பொலிஸ் நிலையங்களும் தாக்கிக் கைப் பற்றப்பட்டன. யாழ்ப் பாணக்குடா நாட்டில் வல் வெட்டித்துறை, பருத்தித் துறைப் பொலிஸ் நிலை யங்கள் கைப்பற்றப்பட்டன.

இரண்டாவது ஈழ யுத்தம் கிழக்கில் தோன்றி வவு னியா, மன்னார், கிளிநொச்சி யூடாக யாழ்ப்பாணத்திற் குள் பிரவேசித்தது. யாழ் பாணக்கோட்டையைச் சுற்றி ஏற்கனவே விடுதலைப் புலிகள் பலமான காவலரண் களை அமைத்துக் கொண்டி ருந்தனர். கோட்டைக்கு மிக அருகிலேயே அக்காவல ரண்கள் அமைக்கப்பட்டிருந் தன.

அக் காவலரண்களி லிருந்து எலி வளைகள் போன்ற சுரங்கப் பாதைகள் பாதுகாப்பான கட்ட டங்களுக்கு அடியாகச் சென் றன. அவற்றின் ஊடாக இலகுவில் காவலரண்களை வந்தடையவும் பலப்படுத் தவும் முடிந்தது. அக் காவ லரண்களும் அவற்றினை இணைக்கும் பங்கர்களும் பலமான காங்கிரீட் கலவை யால் கட்டப்பட்டிருந்தன. பல உயிரிழப்புகளின் மத்தியில் இந்த அரண் களைப் புலிகள் காலத்திற் குக்காலம் பலப்படுத்தியிருந் தனர். ஸ்ரீலங்கா- புலிகள் யுத்தம் ஆரம்பமானதும் யாழ்ப்பாணக் கோட்டையி லிருந்து எவரும் வெளி வரவோ, உட்செல்லவோ முடியாதளவிற்கு புலி களால் தடை விதிக்க முடிந்தது.

12. ஜூன் அன்று பலாலியிலிருந்து வந்த ஹெலிகொப்டர் ஒன்று கோட்டைக்குள் இறங்க முயன்றது. வழமைபோல் அதற்குப் பாதுகாப் பளிக்க கோட்டை இராணுவத்தினர் வெளி யில் வர முயன்றனர். வர வேண்டாமெனப் புலிக ளால் சைகை மூலம் அவர் களுக்குப் பணிப்பு வழங் கப்பட்டது.

அவர்கள் திரும்பிச் சென்றனர். ஹெலியும் தரை இறங்காது திரும் பிச்சென்றது. அன்று தான் இரு பகுதியின ருக்குமிடையிலான யுத்த மேகம் கோட்டை அய லில் பரவிக்கவிழ்ந்தது.

அன்றிரவு யாழ்ப் பாணப் பொலிஸ் நிலை யம் தாக்கப்பட்டது. கிழக்கில் பொலிஸ் நிலையங்கள் தாக் கப்பட்டு வந்ததையறிந்த தால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தினர் எப்பொழுதும் கைவிட்டு ஓடும் தயார் நிலை யில் இருந்துள்ள னர்.

(தொடரும்)

# மரக்கலமல்ல.. மனக்கலம்




# கடற்புறா

"நீங்களும் அமீரும் முதலில். இப்பொழுது இந்துப் பலவர்மன்." இதைக் கேட்டதும் இளைய பல்லவன் விழிகள் திடீரெனப் பளிச்சிட்டன. "உன்னைப் பலவர் மன் பரிகசித்தானா!" என்றும் வினவினான் படைத்தலைவன் சந்தேகம் தொனித்த குரலில்.

படைத்தலைவனையும் உண ர்ச்சி பெறச் செய்து விட்டதால் உள்ளூர மகிழ்ச்சியடைந்த சேந்தன். "ஆம் படைத்தலை வரே! பரிகசித்தான். முதலில் அல்ல கடைசியில்." என்றான்.

"முதலில் என்ன கேட்டான்?" இதற்குள் இளைய பல்லவன் சாதாரண நிலையை அடைந்து விட்டதால் கேள்வியும் சர்வ சகஜமாகவே எழுந்தது.

"நேற்றிரவு பலவர்மன் என் அறைக்குள் சர்வசகஜமாக வந்தான். பொக்கிஷத்தை நான் பாதுகாக்கும் முறையைப் பற்றிப் பெரிதும் பாராட்டினான். பிறகு..." இங்கு சற்றுத் தயங்கினான் சேந்தன்.

"பிறகு?" இளையபல்லவன் பஞ்சணையில் மீண்டும் சாய்ந்து கொண்டு கேட்டான். "திடீரெனத் தன் கழுத்துச் சங்கிலியிருந்த சாவியைக் காட்டினான்" என்று சேந்தன் பயத் துடன் சொன்னான்.

இளையபல்லவன் முகத்தில் ஆழ்ந்த சிந்தனை நிலவியது. "உம்." என்ற சத்தம் மேற்கொண்டு விடய ங்களைச் சொல்லச் சேந்தனைத் தூண்டியது. சேந்தன் சொன்னான்: "சாவியைக் காட்டி அது எப்படி இருக் கிறது என்று கேட்டான். நன்றாயி ருக்கிறது என்று சொன்னேன். "ஏற் கெனவே இதைப் பார்த்திருக் கிறாயா" என்று கேட்டான். சற்றுத் தயங்கினேன். பிறகு பார்த்திருப்ப தாகச் சொன்னேன்.

எப்பொழுது என்று கேட்டான். அவனை யாரோ குத்திக் கொலை செய்ய முயன்ற போது பார்த்ததாகச் சொன்னேன். அவன் பெரிதாக நகைத்தான். என் கோபம் எல்லை மீறியது. அவன் ரத்த வெள்ளத்தில் கிடந்ததை நான் கண்டதாகக் கூறினேன். அவன் முதுகைத் திறந்து காட்டினான். அதில் கத்திக் குத்தின் அடையாளம் ஏது மில்லை. அப்படியானால் ரத்தம் எங் கிருந்து வந்தது என்று கேட்டேன். உன் களிமண் மண்டையிலிருந்து தான் வந்திருக்க வேண்டும் என்று கூறி என் மண்டையிலும் இர ண்டு தட்டுத் தட்டிவிட்டுச் சென் றான்" "அப்புறம்?" இளைய பல்லவன் கேட்டான். குரலில் சிறிது சாந்தியுடன்.

அவன் வெளியில் நகைப்பது என் காதுக்கு விழுந்தது. யாரி டமோ எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று சொல்லிச் சென் றான். எனக்கு அவமானம் தாங்க முடியவில்லை என்றான்.

சரி, தொலையட்டும். என்றான் இளையபல்லவன். எது தொலையட்டும்? என்னை அந்த அயோக்கியன் நகையாடியதா! அவன் வேறு என்ன செய்ய முடி யும்? என்ன செய்ய முடியுமா?"

"ஆமாம் சேந்தா, உயிருடனிருப் பவனைச் செத்து விட்டதாகச் சொன் னால் அவன் வேறு எப்படி நினைக்க முடியும்?

"அப்படியானால் நான் கண் ணால் பார்த்தது பொய்யா?"

இளையபல்லவன் சேந் தனை உற்றுப் பார்த்து நகைத் தான். "சேந்தா! பலவர்மன் சொன்னது ஒருவேளை.." என்று இழுத்தான் நகைப்புக்கிடையே.

"உண் மையாயிருக் கும் போல் தோன்றுகிறதா? இளைய பல்லவரே. நான் பைத்திய மல்ல."

"எந்தப் பைத்தியம் தன் னைப் பைத்தியமென்று ஒப்புக் கொண்டது?"

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா



**“சார்பட்டா பரம்பரை 2”** படத்தின் வேலைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்துவிட்டு, “வேட்டுவம்” படத்தில் தீவிரமாக இருக்கிறார், இயக்குநர் பா.இரஞ்சித். படம் அசுர வேகத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறது. இதை முடித்துவிட்டுத்தான் “சார்பட்டா 2” பக்கம் போவாராம் இரஞ்சித். “வேட்டுவம்” படத்தில் எதிர்மறை நாயகனாக ஆர்யா நடிப்பதால் எதிர்பார்ப்புக் கூடியிருக்கிறது.



**கமல்ஹாசன்** தனது ஐபேடில் 50இற்கும் மேல் ஸ்கிரிப்ட்களை சேமித்து வைத்திருக்கிறார். தினமும் அதை மெருகேற்றிக்கொண்டே இருக்கிறார். இத்துடன், மாதம் ஒரு தடவை புதுப்புதுக் கதைகளையும் உருவாக்கும் முயற்சிக்கும் முதற்புள்ளி வைக்கத் தவறுவதில்லையாம்.



**“நம்ம ஊர் சார்லி சாப்ளின்”** என்கிற அளவுக்குப் போற்றப்படும் அளவுக்குக் கலக்கியவர், சந்திரபாபு. பெரிய ஹீரோ என்று யாரைப் பார்த்தும் ஒதுங்கி நிற்காமல், தன் போக்கில் வெள்ளந்தி கலைஞனாக வாழ்ந்தவர். அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படமாக எடுக்க தற்போது முயற்சி நடக்கிறது. தனுஷ் அல்லது சூரி நாயகனாக நடிக்கலாம் என்று பேசப்படுகிறது. தங்களின் முடிவைப் பொறுத்திருந்து சொல்வதாக இருவருமே சொல்லியிருக்கிறார்களாம். இந்தப் படத்துக்காக பழைய சென்னை உட்பட அனைத்தையுமே பழையதாகக் கொண்டு வர வேண்டும் என்பதால் பட்ஜெட்டும் எகிறக்கூடும் என்கிறார்கள்.


**ரன்பீர் கபூர்**, சாய் பல்லவி, யாஷ், லாரா தத்தா நடிப்பில் பேன் இந்தியா படமாகத் தயாராகிவரும் “ராமாயணா” படப்பிடிப்பு மும்பையில் நடந்து வருகிறது. இந்திய சினிமாவின் மிகப்பெரிய முயற்சியாக இந்தப் படத்தைக் கொண்டு வருவதால், ஹாலிவுட் தொழில்நுட்பக் கலைஞர்கள் தீவிரமாகப் பணியாற்றி வருகின்றனர். சண்டைக் காட்சிகளை “மேட் மேக்ஸ்” உட்பட பல ஹாலிவுட் படங்களின் ஸ்டண்ட் மாஸ்டரான கய் நோரிஸ் வடிவமைத்துள்ளார்.





**பெருந்தலைவர் காமராஜர்** வாழ்க்கை வரலாற்றைப் படமாகத் தயாரித்த நிறுவனம், இப்போது திருக்குறளின் முப்பாலை மையமாகக் கொண்டு “திருக்குறள்” என்ற படத்தைத் தயாரித்துள்ளது. இதற்கு இளையராஜா இசையமைத்தால் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணிய இயக்குநர் ஏ.பால கிருஷ்ணன், அவரை அணுகியிருக்கிறார். மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டு இரண்டு பாடல்களை எழுதியும் கொடுத்துவிட்டாராம் ராஜா.

# முகம் 10; இளையராஜா



**1.** கல்யாணியும் கீரவாணியும் பிடித்த ராகங்கள். இந்த இரு ராகங்களில் தான் அதிக பாடல்களை அமைத்திருக்கிறார். அவரைக் கேட்டால், “எல்லா ராகமும் எனக்கு ஒன்றுதான்!” என்று சிம்பிளாய் சொல்லிவிடுவார்.

**2.** தீவிர சைவம். அண்ணன் பாவலரின் நினைவு நாள் ஒன்றின் போது அசைவத்தைத் துறந்தவர். காலையில் இரண்டு இட்லி, தோசை, ஒரு வடை, மதியம் மரக்கறி உணவு, ரசம் எப்போதும் பிடிக்கும். மாலையில் கொறிக்க வேர்க்கடலை, கூடவே தேநீர் கண்டிப்பாக வேண்டும். இரவில் இரண்டு இட்லி. இதற்கு மேல் எது கொடுத்தாலும் “நோ!”

**3.** எந்த இடத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் அதிகாலையில் எழுந்துவிடும் பழக்கம் உண்டு. இயற்கையின் இரசிகர். பொதிகை மலைக்குப் போனால் இயற்கையை ஒரு மணி நேரத்திற்கு மேலாக ஒரே இடத்தில் நின்று இரசிப்பார். உடன் இருக்கிறவர்கள் ஆச்சரியப்பட்டுப் போவார்கள்.

**4.** தமிழ்நாட்டின் எந்தப் பகுதியும் அவருக்கு அறிமுகம் உண்டு. ஆரம்ப நாட்களில் அது எப்படி இருந்தது என்பது வரை நன்கறிவார். சிவன் கோயில்களுக்குத் தேடித் தேடிப் போவார். “முன்னாடி இந்தப் பாலம் இல்லையே?”, “இங்கே ஒரு ஏரி இருக்குமே?” எனத் தேடுமளவுக்கு தமிழகத்தின் முழு நிலவியலிலும் உலா வந்தவர். பாவலர் அண்ணனோடு முன்பு நெடுந்தூரம் பயணித்ததன் விளைவு இது!

**5.** மறைந்த பாலமுரளி கிருஷ்ணாவின் மீது பெருமதிப்பு கொண்டவர். ஆஷா போஸ்லேயின் குரலுக்கு ரசிகர். தமிழில் சி.ஆர்.சுப்பராமனின் இசையைச் சிலாகிப்பார். ஹிந்தியில் எஸ்.டி.பர்மன், ரோஷன் பிடிக்கும். குறிப்பாக ரோஷனின் “பர்ஸாத் கி ராத்” (Barsaat Ki Raat) படப் பாடல்களை கண்ணீர் மல்கக் கேட்டு இரசிப்பார்.

**6.** பழந்தமிழ் இலக்கியங்கள் படிப்பதில் அதீத ஆர்வம். வெண்பாக்கள் எழுதுவதில் விற்பன்னர். கவிஞர் வாலி, பா.நமச்சிவாயம் போன்றவர்கள் படித்துவிட்டுப் பாராட்டியதை இன்றும் பெருமையாகக் கருதுகிறார். செம்மங்குடியும் ராஜாவின் வெண்பாக்களை உச்சிமுகர்ந்து பாராட்டியிருக்கிறார்.

**7.** வெளியே அறியப்பட்டது போல கடினமானவரே அல்ல, நகைச்சுவை பிடிக்கும். முன்பு நாடகங்களில் சீரியஸாக நடித்துக் கொண்டிருந்த கவுண்டமணி இப்படி காமெடி நடிகராக மாறிப்போனதை இப்பொழுதும் நம்ப முடியாது பேசுவார். வடிவேலுவின் காமெடியும் அவருக்குப் பிடிக்கும்.

**8.** புதிதாக ஆப்பிள் போன் சந்தைக்கு வந்துவிட்டால் மறுநாளே ராஜாவின் கையில் வந்து சேர்ந்துவிடும். தும்பைப் பூ போன்ற வெண்மையோடு கைக்குட்டையும் ஆப்பிள் போனும் வெளியே செல்லும் போது கண்டிப்பாக அவரிடம் இருக்கும். கையிலும் பையிலும் பணம் வைத்துக்கொள்ளும் பழக்கமே கிடையாது. ஆப்பிள் போனின் முகப்பில் எப்போதும் இருப்பது கறுப்பு வெள்ளையில் ரமணர்!

**9.** கொஞ்சம் மனம் சோர்ந்தாலும், முல்லை ஆற்றின் கரையில் லோயர் கேம்ப்பில் இருக்கிற அம்மாவின் சமாதிக்குப் போய் விடுவார். அமைதி வழியும் அந்த இடத்தை அதிகம் விரும்புவார். சமாதியைத் தூய்மைப்படுத்தும் பணியை அவரே மேற்கொள்கிற பாங்கில் அழகு துளிர்க்கும்.

**10.** திருவண்ணாமலை மனசுக்கு நெருக்கமான ஊர். ரமணாசிரமத்தில் அவருக்கென மாடியில் ஓர் அறையை நிரந்தரமாக ஒதுக்கியிருக்கிறார்கள். பௌர்ணமிக்கு திருவண்ணாமலை செல்வதுண்டு. கிரிவலம் செல்ல யாரும் அதிகம் பயன்படுத்தாத உள்பாதையை எப்போதும் தேர்ந்தெடுப்பார். மௌனமே துணை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
# சுகமான விடியல்
454
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# முடக்குவாதத்திலிருந்து எம் மூட்டுக்களைப் பாதுகாக்க...

Rheumatoid Arthritis எனும் முடக்குவாதமானது, ஒரு Auto immune disease ஆகும். அதாவது, எமது நோய் எதிர்ப்பு சக்தித் தொகுதியில் ஏற்படும் அசாதாரண மாற்றத்தினால் தன்னைத்தானே தாக்கும் நோயாக காணப்படுகின்றது. இதற்கான தகுந்த சிகிச்சைகளை தகுந்த நேரத்தில் மேற்கொள்ளாவிட்டால், இது கைகள், கால்களின் மூட்டுக்களை மடக்கி, எமது நாளாந்த நடவடிக்கைகளைப் பாதிக்கின்றது. இதனாலேயே, இந்த நோய் முடக்குவாதம் என அழைக்கப்படுகிறது. பொதுவாக இந்நோய், 16 வயதிற்கு மேற்பட்டவர்களையும், 60 வயதிற்குட்பட்டவர்களையும் தாக்கக்கூடியது.

எனினும், 16 வயதிற்கு குறைந்த சிறுவர்களையும் தாக்கும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இதனை Juvenile Idiopathic Arthritis என்று கூறுவார்கள். அதேபோல், 60 வயதிற்கு மேற்பட்டவர்களையும் தாக்கும் சந்தர்ப்பமும் இருக்கிறது. இந்த வயது எல்லை இருந்தாலும், பொதுவாக 25 வயது தொடக்கம் 40 வயது வரையானவர்களையே இந்நோய் அதிகமாக தாக்குகிறது. அதிலும், ஆண்களை விட பெண்களில் சற்று அதிகமாகவே காணப்படுகின்றது. ஆண்களில் இந்த நோய் ஏற்பட்டால், அதன் தாக்கம் சற்று அதிகமாக காணப்படும்.

இந்நோய் ஏற்படுவதற்கு, முதலாவது முக்கியமான காரணியாக இருப்பது, Unknown Etiology ஆகும். அதா வது, எந்தவொரு காரணமும் இல்லாமல், எமது நோய் எதிர்ப்பு சக்தியில் ஏற்படுகின்ற மாற்றத்தினால் ஏற்படும் Auto immune disease என்று சொல்லலாம். அடுத்த காரணமாக அமைவது, சிறுவயதிலே ஏற்பட்ட வைரஸ் தொற்றினால் எமது நோய் எதிர்ப்பு சக்தித் தொகுதியில் ஏற்படுகின்ற மாற்றத்தினால் ஏற்படும் நோய் நிலைமை ஆகும்.

அடுத்த காரணமாக அமைவது, பரம்பரை ஆகும். எமது பரம்பரையில் ஒருவருக்கு இந்நோய் ஏற்படும் போது, இன்னொருவருக்கு இந்நோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் சற்று அதிகமாக காணப்படுகின்றது.

இறுதியான காரணமாக அமைவது, புகைப்பிடித்தல் ஆகும்.


இந்நோயின் முக்கியமான அறிகுறியாக இருப்பது, எமது மூட்டுக்களில் ஏற்படும் வீக்கத்துடன் கூடிய நோ தன்மை ஆகும். பொதுவாக இந்த அறிகுறி, அதிகாலையிலே அதிகமாக காணப்படும். இதனால், எமது நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படலாம். அடுத்த அறிகுறியாக இருப்பது, Morning Stiffness எனப்படும், மூட்டுக்களிலே ஏற்படும் இறுக்கமான தன்மை ஆகும். இதனாலும், எமது நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படும்.

இந்த Morning Stiffness ஆனது, பொதுவாக ஒரு மணித்தியாலமோ அல்லது அதற்கு அதிகமாகவோ காணப்படலாம். பின்னர், அது படிப்படியாக குறைந்து 10 அல்லது 11 மணியளவில் இந்த இறுக்கமான தன்மை மிகவும் குறைவாக காணப்படலாம். இப்படியான அறிகுறிகள் உங்களுக்கு இருக்குமானால், நீங்கள் உடனடியாக வைத்தியரை அணுகி, அதற்கான சிகிச்சை முறைகளை, தகுந்த நேரத்தில் ஆரம்பிப்பது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், இவ்வாறு செய்தால், மேலதிக பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்க முடியும்.

இந்நோயினால் ஏற்படும் பாதிப்புகள் என்னவென்று பார்த்தால், முதலாவதாக Deformities எனப்படுகின்ற கை மூட்டுகளிலும், கால் மூட்டுகளிலும் அதன் இயல்பான வடிவம் மாறி, முடக்கும் தன்மையை ஏற்படுத்தலாம். இதனால், எமது நாளாந்த நட[illegible] படும். இந்த மூட்டுக்களையும் தாண்டி, அடுத்தடுத்த அங்கங்களை தாக்கக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகின்றது.

பொதுவாக, இந்த நுரையீரல்களைப் பாதிக்கக்கூடும். நுரையீரல்கள் தாக்கப்படுவதனால், Interstitial lung disease எனும் நோய் ஏற்படும். இந்நோய் ஏற்படும் போது அந்த நோயாளிக்கு வறட்டு இருமல், மூச்செடுத்தலில் சிரமம், நாளாந்த நடவடிக்கைகளை செய்யும் போது உடலில் சோர்வு, உளச்சோர்வு என்பன ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது.

அதைவிட, கண்ணில் வறட்சி தன்மை, நாவில் வறட்சி தன்மை, பற்சூத்தைகள் போன்ற பாதிப்புகளும் ஏற்படலாம். இவற்றிற்கு மேலதிகமாக, எலும்பில் பலவீனமான தன்மையும் (Bone weakness) ஏற்படலாம். இவ்வாறான அறிகுறிகள் இருக்கும் பட்சத்தில், நீங்கள் வைத்தியரை அணுகும் போது, அவர் உங்களுக்கு சில அடிப்படையான குருதி பரிசோதனைகளைச் செய்வதற்கு பரிந்துரைப்பார். இவற்றில், பொதுவாக ESR எனும் பரிசோதனை செய்யப்படுகிறது.



Rheumatoid factor என்பது பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இந்த Rheumatoid factor ஆனது காணப்படுமாயின் Positive எனவும், இல்லையென்றால் Negative எனவும் கூறப்படுகிறது. Positive ஆக இருந்தால், இந்த நோயின் தாக்கம் சற்று அதிகமாக காணப்படும். அதேபோல், Negative ஆக இருந்தால், இந்த நோயின் பாதிப்பு சற்று குறைவாக இருக்கும். Negative ஆக இருந்தால், இந்த நோய் இல்லை என்று அர்த்தமல்ல. Rheumatoid factor, Negative ஆக இருக்கும் போது தொடர்ந்தும் மருந்துகளை எடுக்க வேண்டுமா என்ற சந்தேகம் பொதுவாக பலர் மத்தியில் காணப்படுகின்றது.

அவ்வாறு Negative ஆக இருந்தாலும், இந்த நோய் காணப்படலாம். இது பொதுவாக, உங்களது அறிகுறிகளை வைத்து, ஒரு Rheumatologist கண்டறிந்து உறுதிப்படுத்தும் நோயாக காணப்படுகின்றது.

அடுத்ததாக, இந்த Rheumatoid factor தொடர்ந்து Positive ஆக காணப்படும் போது, மருந்துகள் எடுப்பதை நிறுத்த வேண்டுமா அல்லது மருந்துகளை மாற்ற வேண்டுமா என்ற சந்தேகமும் காணப்படுகின்றது. இந்த மருந்துகளை தருவதன் முக்கிய நோக்கம், உங்கள் நோய் அறிகுறிகளை குறைப்பதற்கும், நோயினால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கும் ஆகும். இந்த Rheumatoid factor ஒருவருக்கு Positive ஆக இருந்தால், அது தொடர்ந்தும் Positive ஆக தான் இருக்கும். மருந்துகளை எடுப்பதன் மூலம் இந்த Positive ஐ Negative ஆக மாற்ற முடியாது. இதை நீங்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.

இந்நோய்க்கான சிகிச்சை முறைகள் பொதுவாக இரண்டு பிரதான பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. அவை, Medical Treatment மற்றும் Non Medical Treatment என்பன ஆகும். Medical Treatment எனும் மருத்துவ சிகிச்சை முறையானது, விசேட மருந்து வகை மற்றும் வலி நிவாரண மருந்து வகை என மேலும் இரு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.

இந்த விசேட மருந்து வகைகள், Disease Modifying Drugs எனப்படும். அதாவது, நோயின் பாதிப்பை குறைப்பதற்கும், அந்த நோயின் தொடர்ச்சியை தடுப்பதற்குமான ஒரு மருந்து வகையாக இருக்கிறது.

(தொடரும்...)

**Dr.A. நாரணி**
**மூட்டுவாத வைத்திய நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த இராணுவக் காவலரண் அமைக்கப்படும்

## கடற்றொழில் அமைச்சர்

(தருமபுரம்)

**சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த இராணுவக் காவலரண் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**



கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் கடந்த 15 வருட காலமாக சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது .பல ஆட்சிகள் மாறிவந்த போதிலும் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு நிரந்தர தீர்வு காண முடியாத நிலை காணப்படுகின்றது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் இது தொடர்பாக ஆராய கடற்தொழில் அமைச்சரும் கிளிநொச்சி யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் S. முரளிதரன் கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தாகரன் மற்றும் நீர்பாசன திணைக்களத்தின் உத்தியோகத்தர் கள், ஒருங்கிணைப்பு குழு இணைப்பாளர் உள்ளிட்ட குழுவினர் இக் கள விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர்.

இவ் விஜயத்தின் போது கருத்து வெளியிட்ட கடற்தொழில் அமைச்சர் தொடர்ச்சியாக பல ஆட்சிகள் மாறிவந்த போதிலும் சட்டவிரோத மணல் அகழ்விற்கு நிரந்தர தீர்வு காண முடியாத நிலையில் தற்போதைய தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் ஊடாக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்

கல்லாறு பகுதியில் காணப்பட்ட பறவைகள் சரணாலயம் முற்றாக அழிக்கப்பட்டு உள்ளதுடன் கடல் நீர் மக்கள் குடியிருப்பு பகுதிக்கு உள்வரும் அபாய நிலை தோன்றியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம் பெற்று வருவதனால் அப்பகுதியில் உள்ள வனப்பகுதி முற்று முழுதாக அழிவடைந்து காணப்படுவதனால் உடனடியாக இதனை கட்டுப்படுத்தும் நோக்கில் கல்லாறு பகுதியில் இராணுவ காவலரண்களை அமைத்து சட்ட விரோத மணல் அகழ்வினை முற்றாக கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.(8-316)

## ஆனந்தசங்கரிக்கு அகவை 93



மூத்த தமிழ் அரசியல் வாதியும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீரசிங்கம் ஆனந்தசங்கரி 15 ஆம் திகதி இன்று 93 ஆவது அகவை காண்கின்றார்.

1933ஆம் ஆண்டு ஜீன் மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் பிறந்த ஆனந்தசங்கரி ஆரம்பக் கல்வியை அச்சுவேலி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலும் பயின்றதுடன் உயர் கல்வியை கொழும்பு ஸகீரா கல்லூரியிலும் பயின்றார்.

1966 மே மாதத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசுடன் இணைந்து 1968 ஆம் ஆண்டில் புதிதாக உருவாக்கப்பட்ட கிளிநொச்சி பட்டண சபையின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1970 இல் தமிழ்க்காங் கிரசுக் கட்சியின் இளைஞர் அணியின் தலைவரான ஆனந்தசங்கரி, 1970ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் ஆலாலசுந்தரத்தை 657 வாக்குகளால் தோற்கடித்து பாராளுமன்றம் சென்றார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபக காலம் முதல் இன்று வரை அக்கட்சியினை பாதுகாப்பதிலும், அரசியலிலும் ஈடுபட்டு வந்த ஆனந்த சங்கரி தனது 93 ஆவது வயதிலும் தொடர்ந்தும் அரசியல் பயணத்தை முன்னெடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8-100-316-299)

# கடலில் மிதந்து வரும் மர்மப் பொருட்களை கையாள வேண்டாம்

## மன்னார் அரச அதிபர் எச்சரிக்கை

(மன்னார்)

இந்து சமுத்திரத்தின் கேரளா பகுதியிலே விபத்திற் குள்ளான எம்.எஸ்.சி.எல். எஸ்.3 என்கின்ற கப்பலில் காணப்பட்ட பிளாஸ்ரிக் துவல் கள் தற்போது எமது கடற்கரையோர பகுதிகளில் கரையொதுங்குவதினால் மக்கள் குறித்த பொருட்களை சேகரிக்காது விழிப்புடன் செயற்பட வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ் வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்து சமுத்திரத்தின் கேரளா பகுதியிலே விபத்திற்குள்ளான எம்.எஸ்.சி. எல். எஸ்.3 என்கின்ற கப்பலானது கடந்த மாதம் 25 ஆம் திகதி அன்று விபத்துக்குள்ளானது.

குறித்த கப்பலில் காணப்பட்ட பிளாஸ்ரிக் பொருட்கள், மற்றும் கொள்கலன்கள் இந்து சமுத்திரத்தில் தற்போது வீசுகின்ற தென்மேல் பருவப் பெயர்ச்சி காற்றின் காரணமாக் மன்னாரில் சௌத் பார், கீரி, தாழ்வுபாடு, நடுக் குடா, பழைய பாலம், வங் காலை போன்ற கடற்கரை பகுதிகளில் கரை ஒதுங்கி வருவதை அவதானிக்கக் கூடிய தாக உள்ளது.

கரையொதுங்கும் பிளாஸ்ரிக் துவல்கள் கூடுதலாக சுற்றுச்சூழல் ரீதியிலே தாக்கத்தை ஏற்படுத்துவதாக காணப்படுகின்ற நிலையில், கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில்,முப்படையினரின் உதவியுடன்,கரை ஒதுங்கியுள்ள பிளாஸ்ரிக் துவல்களை சேகரிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில், கடலில் மிதந்து வருகின்ற பிளாஸ்ரிக் கொள்கலன்,மற்றும் பிளாஸ்ரிக் துவல்களை மக்கள் சேகரிப்பதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளது.குறித்த பொருட்கள் சூழல் ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் மிதந்து வருகின்ற பொருட்களை மக்கள் கையாள வேண்டாம். குறித்த பொருட்களை அவதானித்தால் அதனை மாவட்டச் செயலக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளிடமும் தெரியப் படுத்துவதன் மூலம், நாங்கள் மிதந்து வருகின்ற பொருட்களை பாதுகாப்பான முறையில் சேகரித்துக் கொள்ள முடியும்.

எனவே மக்கள் இவ்விடயம் தொடர்பாக விழிப்புடன் செயற்பட வேண்டும். தற் போதைக்கு மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என எமக்கு அறிக்கை இடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (8-285)

# மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் மீட்பு

(நெளுக்குளம்)

ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள பலசரக்கு கடைகள் மீது ஒட்டுசுட்டான், முத்தையன் கட்டு சுகாதார பரிசோதகர்களால் சோதனை நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளபட்டிருந்தது. குறித்த நடவடிக் கையின் போது சில பலசரக்கு கடைகளில் மனித நுகர்விற்கு பொருத்தமற்ற வகையில் புழுப்பிடித்த கோதுமை மா 46kg மற்றும் வண்டு மொய்த்த பருப்பு 20kg கைப்பற்றப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன.

ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரிகளான பசீர்தன், சஞ்சீவன் தலைமையில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்தது.

கோதுமை மா விநியோகஸ்தர்கள் பொருளின் தரத்தை உறுதிப்படுத்தி விநியோகம் செய்யுமாறும் சில்லறைக்கு விற்பனை செய்பவர்கள் உணவுப்பொருளின் தரத்தை உறுதி செய்து விற்பனை செய்யு மாறும், அத்துடன் குறித்த மாவினை பெற்றுக்கொண்ட சில்லறை கடை உரிமையாளர்கள் மாவின் தரத்தை உறுதி செய்யுமாறும் மனித நுகர்விற்கு பொருத்தமற்ற மாவினை கடைகளில் விற்பனைக்காக வைத்திருந்தால் சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனவும் சுகாதார பரிசோதகர்களால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.(8-299)



முல்லைத்தீவு மாவட்டத்தின் தொன்மையான வரலாற்றினைக் கொண்ட அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த பெருநாள் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி மாலை நற்கருணை வழிபாட்டுடன் ஆரம்பமாகி 13.06.2025 அன்று காலை திருவிழா திருப்பலி விசேட பூசை வழிபாடுகளுடன் நிறைவு பெற்றன.

(படம்:- தவசீலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல்-ஈரான் பரஸ்பரம் தாக்குதல்!

## அதிகரிக்கும் போர்ப்பதற்றம்

(ஜெருசலேம்)

**இஸ்ரேல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை ஆபரேஷன் ரைசிங் லயன் என்ற பெயரில் ஈரான் மீது மிகப்பெரிய அளவில் வான்வழித் தாக்குதல் நடத்தியது.**

இதில் ஈரான் அணுசக்தி நிலையங்கள், இராணுவத் தளபதிகள் மற்றும் முக்கிய உட்கட்டமைப்புகள் இலக்கு வைக்கப்பட்டன. டெஹ்ரான் மற்றும் இஸ்ஃபஹான் உள்ளிட்ட பல நகரங்களில் வெடிச்சத்தங்கள் கேட்டன.

இந்தத் தாக்குதலில் 78 பேர் உயிரிழந்ததாகவும், 320 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் ஈரான் ஐ.நா. தூதர் தெரிவித்தார். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலடியாக, ஈரான் "ஆபரேஷன் ட்ரூ பிராமிஸ்" என்ற பெயரில் இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் மற்றும் ஜெருசலேமை நோக்கி ஏவுகணைகளை ஏவியது. இதில் ஒருவர் உயிரிழந்ததுடன், குறைந்தது 34 பேர் காயமடைந்தனர்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை வரையிலும் இரு நாடுகளும் மாறி மாறி வான்வழித் தாக்குதல்களை நடத்தின. இஸ்ரேல் பல ஈரானிய ஏவுகணைகளை அமெரிக்காவின் உதவியுடன் இடைமறித்ததாகத் தெரிவித்தது.

டெல் அவிவ் மற்றும் ஜெருசலேமில் வான்வழி சைரன்கள் ஒலித்தன. மத்திய இஸ்ரேல் முழுவதும் வெடிச்சத்தங்கள் கேட்டன.

இரு நாடுகளும் மேலும் தாக்குதல்களைத் தொடரத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள நிலையில், மத்திய கிழக்கில் போர்ப்பதற்றம் அதிகரித்துள்ளது. (ரி-8)




# காசாவில் உடனடி போர் நிறுத்தம்; தீர்மானத்திற்கு இலங்கை ஆதரவு

(ஜெனீவா)

காசாவில் உடனடி மற்றும் நிரந்தரப் போர் நிறுத்தம் கோரி கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக இலங்கை வாக்களித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்தின் காசா பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் அமைப்புக்கும் இடையே கடந்த, 2023 ஆம் ஆண்டு ஒக்டோபரிலிருந்து மோதல் நடந்து வருகிறது.




இந்தப் போரில் காசாவில் இதுவரை 55,000 இற்கும் மேற்பட்டோர் இறந்ததாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் ஸ்பெயின் சார்பில் போர் நிறுத்தத் தீர்மானம் நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டது.

தீர்மானத்தின் உள்ளடக்கங்களாக, நிரந்தரப் போர் நிறுத்தம், மனிதாபிமான உதவிகளுக்கான தடையை இஸ்ரேல் நீக்க வேண்டும், பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்க வேண்டும், இஸ்ரேல் படைகள் வெளியேற வேண்டும் ஆகியவை இடம்பெற்றிருந்தன.

இதன்போது ஐக்கிய நாடுகள் சபையில், 193 உறுப்பினர்களாக உள்ள 193 நாடுகளில், 149 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

12 நாடுகள் எதிராக வாக்களித்தன. இந்தியா உட்பட 19 நாடுகள் வாக்களிப்பைத் தவிர்த்தன. (ரி-8)

# ஜம்மு காஷ்மீர் குறித்து சர்ச்சைக்குரிய வரைபடம்

## மன்னிப்பு கேட்டது இஸ்ரேல்

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் குறித்து சர்ச்சைக்குரிய வரைபடத்தை இஸ்ரேல் வெளியிட்ட நிலையில், தவறை உணர்ந்து அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் மன்னிப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு துணை நிற்கும் ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன.

இதனிடையே, உலக நாடுகளின் வரைபடத்தை வெளியிட்டுள்ள இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகம், "ஈரான் ஒரு உலகளாவிய அச்சுறுத்தல். இது வெறும் ஒரு தொடக்கம் மட்டுமே. நடவடிக்கை எடுப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழி இல்லை," எனக் குறிப்பிட்டிருந்தது.

இந்த வரைபடத்தில் ஜம்மு காஷ்மீர் பகுதி பாகிஸ்தானுடன் இருப்பதைப் போல குறிப்பிடப்பட்டிருந்தது. இது பெரும் சர்ச்சையான நிலையில், இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது. அதாவது, "இது வெறும் பிராந்தியத்தை குறிப்பிடுவதற்காக மட்டுமே இந்த உலக வரைபடம் பகிரப்பட்டுள்ளது.

இதில், எல்லைகள் துல்லியமாக காட்டப்பட வில்லை. ஏதேனும் தவறு இருந்தால் மன்னித்து கொள்ளுங்கள்," எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் இடையே எல்லை பிரச்சினை பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக்கில் சில பகுதிகள் பாகிஸ்தான் மற்றும் சீனாவால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக இந்தியா கூறி வருகிறது. (ரி)


# குறைவடைந்து வரும் மின்மினிப் பூச்சிகள்

(வோஷிங்டன்)

பூச்சிக்கொல்லி காரணமாக மின்மினிப் பூச்சிகளின் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருகிறது

மின்மினிப்பூச்சிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 1-2% குறைந்து வருகிறது. இரவு நேரத்தில் ஒளிரும் மின்மினிப் பூச்சிகளை யாருக்குத்தான் பிடிக்காது. கோடைக்காலம் தொடங்கிவிட்டது என்பதை மின்மினிப்பூச்சிகள் ஒளிர்வதை வைத்து அறிந்துகொள்ள முடியும்.

இந்நிலையில், வாழ்விட இழப்பு, ஒளி மாசுபாடு மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு காரணமாக மின்



மினிப் பூச்சிகளின் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருகிறது என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. மின்மினிப்பூச்சிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 1-2% குறைந்து வருவதால் இரவில் மின்மினிப்பூச்சிகள் எரிவதைக் காணும் கடைசி தலைமுறையாக நாம் இருக்கலாம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ரி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் அநீதி கண்டு கோபமும் வெறுப்பும் கொண்டு நீ குமுறி எழுவாயானால் நாம் இருவரும் தோழர்கள். – சே குவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்களுக்கு சேவை செய்வதில் முழுமனதோடு அர்ப்பணியுங்கள்

உள்ளூராட்சி சபைகளின் நோக்கம் அந்தந்த பிரதேச, நகர, பட்டின, மாநகர சபைகளுக்குட்பட்ட மக்களுக்கு, அவர்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டு சேவைகளை வழங்குவதாகும்.

அதன் பொருட்டே மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்டு அந்தந்த உள்ளூராட்சி சபைகள் நிர்வகிக்கப்படுகின்றன.

இங்கு மாநகர சபை எல்லைக்குள் வாழ்கின்ற மக்களின் பிரச்சினையும் ஒரு பிரதேச சபையின் எல்லைக்குள் வாழுகின்ற மக்களின் தேவைகளும் வேறுபட்டவையாக இருக்கலாம்.

எனவே அந்தந்த சபைகள் அந்தந்த மக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் கடுமையாகப் பாடுபடவேண்டும்.

அந்தவகையில் இப்போது வட. மாகாணத்தில் குறிப்பிட்ட சபைகளில் ஆட்சி அமையப் பெற்றுள்ளன.

அரசியல் போட்டிகள், முரண்பாடுகள் என்பவற்றின் மத்தியில் அமையப்பெற்ற சபைகள் தமக்குரிய பதவிக்காலத்தில் மிகவும் சிறப்பாக செயலாற்றுவதிலேயே அவற்றின் வெற்றி தங்கியுள்ளது.

இங்கு எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கும் உரிய மதிப்பை வழங்கி அவர்களையும் அரவணைத்துக் கொண்டு செல்வதன் மூலமே இலக்கை அடைய முடியும்.

எதிர்க்கட்சி என்பதற்காக எதிர்க்க வேண்டும் என்ற கருத்து யாரிடமேனும் இருக்குமாயின் அது அர்ப்பத்தனமாகும்.

அதேபோன்று எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆளுந்தரப்பை எதிர்க்க வேண்டும் – அவர்களின் ஆட்சியைக் குழப்ப வேண்டும் – நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர வேண்டுமென நினைக்காமல், எங்கள் மக்களுக்கு வேண்டிய சேவைகளை வழங்குவதற்கான ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் ஆளுந்தரப்புக்கு வழங்கி உள்ளூராட்சி சபைகள் உச்சமாகச் செயலாற்றுவதற்கு உதவுவது அவசியமாகும்.

உதாரணத்துக்கு யாழ்ப்பாண மாநகர சபை ஆட்சி அமையப்பெற்றுள்ளது. யாழ்ப்பாண மாநகர சபையைப் பொறுத்தவரை கழிவகற்றல், தெருநாய்களின் தொல்லை, மழை காலத்தில் வெள்ளம் தேங்குதல், வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ளம் புகுதல், கட்டிட நிர்மாணத்துக்கான அனுமதி ஆய பல்வேறு விடயங்கள் முதன்மைப் பிரச்சினையாக அமைந்துள்ளன.

இங்கு கழிவகற்றலுக்கும் தெருநாய்த் தொல்லைக்கும் நிரந்தரமான வழிமுறைகள் எட்டப்படும்போது அரைவாசிப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும்.

வெள்ளம் தேங்குதல் என்பதற்குள் கட்டுமானங்களுக்கான அனுமதிகள் வழங்கும் விவகாரம் எழுகை பெறும்.

இங்கு அவற்றுக்கும் சரியானதும் விரைவானதுமான தீர்வுகளைக் காணும்போது எல்லாமுமே சுமுகமாகிவிடும்.

இதைச் செய்வதற்காக அர்ப்பணிப்போடும் முழுமனத்தோடும் சேவையாற்ற வேண்டும்.

இதன்மூலமே உள்ளூராட்சி சபைகளால் உச்சமான சேவையை பொதுமக்களுக்கு வழங்க முடியும்.

## வரணியில் விபத்து இருவர் காயம்

(கொடிகாமம்)

கொடிகாமம் வரணிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கழிவகற்றும் பவுசர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வரணி, வேம்பிராய் வீதியில் இயற்றாலைப் பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் வேம்பிராய் வீதியால் வரணிப் பகுதி நோக்கிப் பயணித்த கழிவகற்றும் பவுசர் வாகனம் தும்புருவில் வீதியால் திரும்பிச் செல்ல முற்பட்ட வேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அந்தப் பவுசருடன் மோதுண்டதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மோட்டார் சைக்கிள் சேதங்களுக்குள்ளாகியுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-4,7)

## கோண்டாவிலில் தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் ஆதரவில் இயங்கும் குட்டிச் சுட்டி முன்பள்ளியின் தமிழ்த்தின விழாவானது இன்று ஞாயிற்றுக்கிழமை (15) காலை- 08.30 மணியளவில் கோண்டாவில் இராஜேஸ்வரி திருமணமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூகநிலையத் தலைவர் து.சுதன் தலைமையில் இடம்பெறும் குறித்த நிகழ்வில் தீவக வலய ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்லையா இளங்கோ பிரதம விருந்தினராகவும் குமரன் விளையாட்டுக் கழக கனடாக் கிளை உறுப்பினர் திருமதி. இராசதுரை ரஜீவ்காந்த் தம்பதியினர், யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய இசை ஆசிரியர் திருமதி.வசந்தகுமாரி அமுதபாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-4,7)

## ஜே.வி.பி - சீன கமியூனிஸ்ட்கள் இடையே முக்கிய சந்திப்பு

(குய்சோ)

மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களுக்கும் இடையே முக்கிய கலந்துரையாடல் ஒன்று ரில்வின் சில்வா மற்றும் க்ஷியு லின் ஆகியோரது தலைமையில் சீனாவின் குய்சோ பகுதியிலுள்ள மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் குய்சோ குழுவின் செயலாளர் க்ஷியு லின், மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வெற்றிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இந்த இரு கட்சிகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவதற்கான செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஊடாக சீனாவுக்கும் இலங்கைக்கும் பல நன்மைகள் கிடைத்துள்ளதாகவும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஊடாக இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மேலும் வலுவூட்டப்பட்டுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதன்போது தெரிவித்திருந்தார். (ம-4,7)

### கொச்சிக்கடைப் பகுதியில் ஆட்டோக்குள்

## எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட பொலிஸ் அதிகாரி

நீர்கொழும்பு - கொச்சிக்கடை, கம்மல்துறை கடற்கரை பகுதியில் நேற்றுக் காலை முச்சக்கர வண்டியுடன் எரிந்த நிலையில் பொலிஸ் அதிகாரி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்புப் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் நீர்கொழும்பு தழுபத பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய பொலிஸ் அதிகாரி ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்புப் பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் மற்றும் கொச்சிக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7)

## பண்டிதர் பரந்தாமன் நேற்றுக் காலமானார்

ஈழத்துப் பண்டிதர், பாடலாசிரியர் வீ.பரந்தாமன் அவர்கள் பருத்தித்துறைப் புலோலியில் நேற்றுக் காலமானார்.

"மானம் ஒன்றே வாழ்வெனக் கூறி வழியில் நடந்தான் மாவீரன்" என்ற பாடலில் தொடங்கி பல்வேறு பாடல்களை எழுதியதுடன் மட்டுமின்றி ஈழப் போராட்டக்களத்தில் பல்வேறு பங்காற்றியவர்.

தாயக மண்ணின் முதுபெரும் கலை இலக்கியப் பேராளர் பாலபண்டிதர், பண்டிதர் மொழி ஆய்வாளர், கவிஞர் பாடலாசிரியர், ஆசிரியர் தாயக தேசப்பற்றாளர் எனப் பல ஆளுமைகளைக் கொண்டவர் பண்டிதர் பரந்தாமன் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4,7,60)

### நெல்லியடி அந்தோனியாரின் திருவிழாவில்

## திருடர்கள் கைவரிசை தங்காபரணங்கள் மாயம்

நெல்லியடி அந்தோனியார் தேவாலயத் திருவிழாப் பூசை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இதன்போது அங்கு பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த மூவரது தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன.

இது குறித்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் நகைகளை மீட்க துரித விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-4,7,60)

## கோப்பாய் படுகொலை தொடர்பில் இருவர் கைது

(கோப்பாய்)

யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இளம் குடும்பஸ்தர் ஒருவர் வன்முறை கும்பலொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் நேற்று கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் இரவு முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த பிரஸ்தாப நபரை மடத்தடிப் பகுதியில் வழிமறித்த சந்தேகநபர்கள் கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

இதன்போது படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் இருபாலை மடத்தடிப் பகுதியைச் சேர்ந்த சந்திரன் துஷ்யந்தன் என்ற 44 வயதுடைய இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுத்திருந்த கோப்பாய்ப் பொலிஸார் வாள்வெட்டு தாக்குதல் நடத்திய இருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் தற்சமயம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்ஃப்ளுவன்ஸா தொற்று இதய பாதிப்பை ஏற்படுத்தும்

## எச்சரிக்கை மருந்துவர் தீபால் பெரேரா



(கொழும்பு)


**இன்ஃப்ளுவன்ஸா தொற்று அறிகுறிகளைக் கொண்ட சிறுவர்கள், விளையாட்டு அல்லது கடுமையான உடல் செயற்பாடுகளில் ஈடுபட்டால், அவர்களுக்கு இதய பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக, சிறுவர் நல மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.**

சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் ஆலோசகர், தீபால் பெரேரா, இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

எனவே, பெற்றோர்கள் இதுபோன்ற அறிகுறிகளைக் கொண்ட பிள்ளைகளை வீட்டிலேயே வைத்திருக்க வேண்டும் என்றும், அவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கை முழுவதும், டெங்கு மற்றும் சிக்குன்குனியா பாதிப்புகள் அதிகரித்து வருவதுடன், சிறுவர்கள் மத்தியில் வயிற்றுப் போக்கும் பரவி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

# பாலை மர தீராந்திகளை கடத்தியவர் கைது



(யாழ்ப்பாணம்)

முட்கொம்பன் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பாலை மர தீராந்திகளை கொண்டு சென்ற ஒருவர் பொலிஸாரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சூட்சுமமான முறையில் கப் ரக வாகனத்தின் கீழ் தீராந்திகளை மறைத்து கொண்டு சென்றவேளை, சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சங்குப்பிட்டியில் கடமையில் இருந்த பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது விசுவமடுவைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3326

### மகேஸ்

ஆசிரியர்: யானை, எறும்பு இரண்டில் எது பெரியது?



அப்படி உடனே சொல்ல முடியாது சார். பிறந்த திகதி சொல்லுங்கள்

### மேனகா

அவசர தேவைக்கு கடன் கேட்கும் போது பெறப்படும் பதில்களை பொறுத்து அமைகிறது



நம்மீது மற்றவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை...!

### சஞ்சயன்

அம்மா, அப்பா தாங்கள் கஸ்டப்பட்டதை சொல்லும் போது கதையாக தெரிந்த நமக்கு



இப்போது நாங்கள் வாழும் போது தான் தெரிகிறது. அது கதை அல்ல வாழ்க்கை என்று எல்லாரும் உணரும் காலம் வரும்.

### சாகித்தியன்




### ரவி

பொய் சொல்லவும், ஏமாற்றவும் தெரியாதவர்களை பார்த்து உலகம் சொல்கிறது...



அவனுக்கு சமார்த்தியம் காணாது என்று

### தர்மினி

ஆண் காதலிக்கும் போது 'பாக்கியசாலி' பெண் காதலிக்கும் போது 'அதிஷ்டசாலி'



காதலிக்காமல் இருப்பவர்கள் தான் 'புத்திசாலிகள்'

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் தினசரி...

ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த சேவை தற்போது வார இறுதி நாட்களில் மட்டுமே இயக்கப்படுகிறது.

இருப்பினும், திறன் மேம்பாடுகளுடன், தினசரி சேவைகள் இம்மாதத்துக்குள் மீண்டும் தொடங்கும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## செம்மணியில்...

பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

## புலிகளால்...

இருப்பதாகத் தெரிவித்து நேற்று (14) காலை மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் முன்னிலை

மஹஜன சம்பத
திகதி 2025.06.14
சீட்டிழுப்பு இலக்கம் 5860
H 7 7 7 1 7 0
அத சம்பத
H 7 1 7 0
சீட்டிழுப்பு இலக்கம் 0435
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1890
M 43 52 57 82 M
Double Chance 34198

மெகா பவர்
திகதி 14/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2208
I 18 16 60 63 73

ஜய ஜய JAYA
திகதி 2025.06.14
சீட்டிழுப்பு இலக்கம் 0128
E 2 3 6 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4102
சீட்டிழுப்பு திகதி 14.06.2025
F 16 45 53 75
F

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.14
சீட்டிழுப்பு இலக்கம் 1169
விருச்சிகம் 34 41 51 55 விருச்சிகம்
37475 29

பில் பெக்கோ இயந்திரம் மூலம் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

எனினும் அகழ்வு நடைபெற்ற இடத்தில் எவ்விதமான பொருட்களும் மீட்கப்படவில்லை. (ம-7,4)

## 240 கிலோ...

பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவர்கள் மேற்கொண்ட விசேட கண்காணிப்பின் போது இந்த கஞ்சா கடத்தல் முறியடிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,4,33)

## கே.கே.எஸ்...

அசாதாரண காலநிலை காரணமாக கப்பல் சேவையானது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கப்பல் சேவையானது எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் மீண்டும் சேவையில் ஈடுபடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,4,104)

## ஐ.நா கூட்டத்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கின் உலகளாவிய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான அறிக்கையுடன் ஜெனிவாவில் இந்தக் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை இந்தக் கூட்டத் தொடருக்கு மத்தியில், எதிர்வரும் 23ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரிலேயே இலங்கை தொடர்பில் உயர்ஸ்தானிகரின் வாய்மொழிமூல அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

அத்துடன், இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை குறித்த புதிய தீர்மானமொன்றைக் கொண்டுவருவது குறித்தும் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,4)

## யாழ்.பொருளா...

தெரிவித்தார்.

பொருளாதார மத்திய நிலையத்துக்கு நேற்று கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டபோது ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், யாழ்.மட்டுவிலில் நிர்மாணிக்கப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலையம் கடந்த 2022 மார்ச் மாதம் திறந்து வைக்கப்பட்டது. நிர்மாணப் பணிகளுக்கென 200 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டிருந்தது.

எனினும், பொருளாதார மத்திய நிலையத்தின் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை. தற்போது அந்நிலையம் முடங்கி, பறவைகளின் கூடாரமாக மாறியுள்ளது.

இந்நிலையில் மக்களின் கோரிக்கையின் பிரகாரம் பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பிப்பதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

அத்துடன், வடக்கில் இயங்காத நிலையில் உள்ள அனைத்து தொழிற்துறைகளும் மீள ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7,4,33)

## 10 பொலிஸ்...

காங்கேசன்துறை பொலிஸ் நிலைய தொலைபேசி எண்ணுக்கு ஒரு அநாமதேய அழைப்பு வந்துள்ளது. பொறுப்பாளராகச் செயற்பட்ட ஒரு பொலிஸ் சார்ஜன்ட் அந்த அழைப்பை எடுத்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தொலைபேசியில் அந்த நபர் காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள பத்து பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகக் கூறி அழைப்பைத் துண்டித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி மிரட்டல் அழைப்புத் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,4)

## ஈரான்...

துள்ளமையானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இஸ்ரேலும் ஈரானும் நேற்று முன்தினம் இரவு முழுவதும் ஏவுகணைகள் மற்றும் வான்வழித் தாக்குதல்களால் ஒருவரையொருவர் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி வந்தன.

உள்ளூர் நேரப்படி நேற்று காலை வரை, டெல் அவிவ் மற்றும் ஜெருசலேம் உட்பட இஸ்ரேல் முழுவதும் வான்வழித் தாக்குதல் சைரன்கள் ஒலித்தன. அதே வேளை பொது மக்கள் மாற்று தங்குமிடம் தேடுமாறு வலியுறுத்தப்பட்டனர்.

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி காமெனியிடம், இஸ்ரேலியபொது மக்கள் மீது ஏவுகணைகளை தொடர்ந்து வீசினால், "தெஹ்ரான் எரியும்" என்று எச்சரித்ததாக ரொய்ட்டர்ஸ்செய்தி வெளியிட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்கள் தொடரும் என்று ஈரான் நேற்று அறிவித்துள்ளது. (ம-7,4)

(மேலும் செய்திகள் உள்ளே)

## அரசு நடவடிக்கை...

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில்,

அத்தியாவசிய மருந்துகளின் கடுமையான பற்றாக்குறை தொடர்பில் அரசாங்கம் அவசரமாகத் தலையிட வேண்டும்.

முக்கியமான மருந்துவப் பொருட்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை உபகரணங்கள் இல்லாததால் பொதுச் சுகாதார அமைப்பு பெரும் சரிவை எதிர்கொள்கிறது.

இலவச சுகாதார சேவையை வழங்க வேண்டிய அரசமருத்துவமனைகள்கூட மருந்துகளை வழங்க முடியாமல், நோயாளிகள் தனியார் நிறுவனங்களிலிருந்து அதிக விலையில் அவற்றை வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

மனித உயிரைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமை என்பதை வலியுறுத்தி, அனைத்து பொறுப்புள்ள அதிகாரிகளும் தாமதமின்றி செயற்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7,4)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பௌன் சம்பத
14.06.2025 வெற்றி வாரம் 568
ஆங்கில எழுத்து E
2 7 5 7 5 2
58395
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,175,988.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2834
சீட்டிழுப்பு திகதி 2025.06.14 தினம் சனிக்கிழமை
03 52 63 67 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,254,001.60
DLB

சனிதா Shanida
14.06.2025 வெற்றி வாரம் 4995
01 29 34 43 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,292,474.00
ரூ. 50,000/- 61804
DLB

சசிரி
704
14.06.2025
சனிக்கிழமை
17 40 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4546
சீட்டிழுப்பு திகதி 14.06.2025 தினம் சனிக்கிழமை
11 15 22 43
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,569,101.60
219335
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 09 02 08 31 34
2010
14.06.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.578,110,444.40
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2660
சீட்டிழுப்பு திகதி: 2025.06.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,789,328.80
29 43 73 74 E
304612
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு உண்டு

வட்டுக்கோட்டை தெற்கு, மூளாய் வீதிப் பகுதியில் 2 பரப்பு 7 குளி காணியில் அமைந்துள்ள முற்றிலும் Marble பதிக்கப்பட்ட வடக்கு வாசல் வீடு விற்பனைக்குண்டு.

- இரண்டு அறைகள்
- இணைந்த குளியலறை
- இரண்டு ஹோல்கள்
- வெளிமலசலகூடம்
- சமையலறை
- பயன்தரு தென்னைகள்
- சாப்பாட்டறை
- மற்றும் மரங்கள் உண்டு

- அனைத்து ஆவணங்களும் தெளிவாகவுள்ளது.
- தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம்.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு : (4539)

**077 977 3233**
**075 049 1465**

## TECHNICAL CLASSES

தொழில்நுட்ப விரிவுரையாளர்களால் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள்

- Mobile Phone Technician
  - Hardware - Software - Trouble Shooting
- CCTV Technician
  - Skills in the Installation, Configuration and maintenance of CCTV System

முழு நேர/ பகுதி நேர வகுப்புக்கள். காலம் : 1 மாதம்/ 2 மாதம் (1230)

**APSS INTERNATIONAL**
**188, K.K.S Road, CHUNNAKAM.**

## பிரத்தியேக வகுப்பு

- க.பொ.த உயர்தரம் பொருளியல்
- க.பொ.த சாதாரணம் குடியியற்கல்வி

தனியாகவும் குழுவாகவும் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். (4537)

077 900 7597, 077 906 4595

## உதவியாளர் தேவை

றபர் ஸ்ராம், பிளாஸ்டிக் நேம்போட், வாகன நம்பர் பிளேட் தயாரிக்கும் கலையகத்திற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. ஓரளவு ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. நேர்முகத் தேர்வுக்கு நேரில் வரவும்.

**வீமா ஆட்ஸ்** (4543)

262, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

அலைபேசி : 077 447 1119

## வணிகக் கடை வாடகைக்கு

ஸ்ரான்லி, யாழ் நகரில் வணிக இடம் (1,2,3 ஆம் மாடிகள்) வாடகைக்கு உள்ளது. அலுவலகங்கள் மற்றும் வங்கிகளுக்கு உகந்தது. (4548)

தொடர்புகளுக்கு :

**077 806 8046**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

**Special offer 50% Discount to all the Courses** (4455)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

## காணி, வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் கோயில் சூழலில் 4 பரப்பு வீடு கட்டக்கூடிய காணியும், புதிய வீடும் (4 பரப்பு) விற்பனைக்கு உண்டு. (4528)

**077 129 8159**

## தையல் நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தையல் நிலையம் ஒன்றிற்கு வேலை தெரிந்த பெண் வேலையாட்கள் தேவை. (சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.) (C-3200)

தொடர்புகளுக்கு :

**077 729 7526**

## காணி விற்பனைக்கு

206/3 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள (4) நான்கு மாடிக் கட்டிடமும், 2 1/4 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. (4538)

தொடர்புகளுக்கு : **077 625 1447**

## இந்திராதேவி தையலகம்

தையல் பழக விரும்புவோர் இவ் எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

077 497 2867
077 869 1672

சாறி ப்ளவுஸ், எல்லா வகையான ஆடைகளும் தைத்துக் கொடுக்கப்படும். (C-3201)

உடுப்பிட்டி வீதி,
அல்வாய் தெற்கு, மாலி சந்தி.

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3970/- |
| 11-16 Kg | 2800/- |
| 21-30 Kg | 2640/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள் ; எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- · France 11Kg - 2220/- · Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- · Australia 11Kg - 1980/- · Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237


## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினரான **திரு.இ.உமாசங்கர்** மற்றும் **திரு.இ.கௌரிபாலன்** அவர்களினது அன்புத் தந்தை

**அமரர் இராசையா இராசநாயகம்**



அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு ஆழ்ந்த துயருறுவதுடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா மஞ்சவனப்பதி முருகன் திருவடிகளைச் சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில் 1946.03.22 — விண்ணில் 2025.06.14

(C-3202)

பிரிவால் துயருறும் : **தர்மகர்த்தா சபை, மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், கொக்குவில்.**


## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 218/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 256/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 415/= | |
| 1Kg றவை | - 295/= | Max 3Kg |
| 1Kg பொன்னி அரிசி | - 249/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் பச்சை | - 215/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 240/= | |
| 10Kg விஜிதா | - 2800/= | |
| 1Kg மல்லி (M) | - 355/= | |
| 1Kg உளுத்தம்பருப்பு | - 749/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 799/= | |
| 1Kg கடலை | - 385/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| 400g விம் கட்டி | - 250/= | ~~265/=~~ |



400g Anchor 1040/= ~~1100/=~~



1Kg Sunlight 270/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (1232)

Happy Supermarket
0777 8080 30

## விற்பனைக்கு

- யாழ். பிறவுண் வீதியில் நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் பிறவுண் வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்
- யாழ்.வைமன் வீதியில் வைமன் வீதி முகப்புடன் 2 பரப்பு, 1 ½ பரப்புக் காணியும்
- யாழ். செட்டித்தெருவில் 5 பரப்புக்காணியும், 2 பரப்பில் அமைந்த அதிநவீன மாடி வீடும்
- யாழ். மின்சார நிலைய வீதியில் C.T.B தரிப்பிடத்திற்குப் பின்பாக 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 3 மாடிக் கடையும்
- யாழ்.மின்சார நிலைய வீதி, தபாற்கந்தோர் வீதியில் 6 பரப்பில் அமைந்த காணியும் கட்டிடமும்
- யாழ்.தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியும் கட்டிடமும் உடன் விற்பனைக்குண்டு.

(C-3197)

**077 723 2535**

## காணி விற்பனைக்கு

நிலாவரை சந்திக்கு அருகில் முதலீட்டுக்கு சிறந்த 2 பரப்பாக பிரிக்கப்பட்ட 30 காணித் துண்டுகள்

- வங்கிக்கடன் பெறக்கூடிய தெளிவான ஆவணங்கள்
- போக்குவரத்துக்கு இலகுவான தார் வீதி
- நல்ல தண்ணீர் வளம்
- அமைதியான குடியிருப்புள்ள சூழல்
- பரப்பு 17 லட்சம் ரூபா, உடன் கொள்வனவு செய்பவருக்கு 10% கழிவு உண்டு.

தொடர்புகளுக்கு : (4513)

**077 082 1010, 075 676 4346**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org